...பாலால்—ரத்ன, தங்க, வெள்ளி நகை வியாபாரிகள்
216, சைனாபஜார் ரோட், சென்னை.

Regd. No. M. 916.

ஸ்ரீ:

வேதாந்த தீபிகை.

ஸம்புடம் 19] விபவஹு—கார்த்திகைமீ [...

பத்ராதிபர்—ஸ்ரீ. [illegible]
வருஷ சந்தா ரூ. 3.] November, 1928. [அஞ்சிகை 1-க்கு அணா 6

2 MAR 1929

ஸ்ரீ:

॥ ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம: ॥

வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 19] விபவ ஹூ, கார்த்திகை மீ [ஸஞ்சிகை 2

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே ।
வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா ॥
[ஸ்ரீ பாகவதம். 1-9-23]

ஸ்ரீ:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்.

(ஸ்ரீ உ.வே. வித்வான் ஏ. வி. கோபாலாசார்யர், எம். ஏ., பி. எல்,)

(ஸஞ்சிகை 1, பக்கம் 9 தொடர்ச்சி.)

—✿✿✿✿✿—

“ [illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ ”

‘நாடக மென்பது பார்க்கும் ஸாமாஜிகர்களால் அநுபவிக்கக்கூடிய ரஸத்தால் நிரம்பினதாக இருக்கவேணுமே. ச்ருங்காரம் வீரம் கருணம் போன்ற முக்யமான ரஸங்களில் ஒன்றை அது அவலம்பித்து இருக்கவேணுமே. நாட்யத்தில் எட்டு ரஸங்கள் உள்ளனவென்று சொல்லப்பட்டிருக்கின்றனவே. அவ்வெட்டு ரஸங்களில் உமக்கு இஷ்டமான சாந்தி ரஸம் சேர்ந்ததல்லவே. ஒன்பதாவது ரஸமாக ஶாந்தி ரஸத்தை ஒப்புக்கொண்டிருக்கிறார்களென்று சொன்னாலும், ரதி கோபம் உத்ஸாஹம் முதலிய பாவங்களிலேயே

22 MAR 1929 MADRAS
186790.

ஸ்ரீ:

விஷய ஸூசிகை.

1. ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்—ஸ்ரீ. உ.வே. வித்வான் ஏ. வி. கோபாலாசார்யர் எம். ஏ. பி. எல். 33
2. ஸ்ரீ ராமாநுஜாசார்யரும் ஸ்ரீ கண்டாசார்யரும்— ஸ்ரீ உ.வே. வித்வான் புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யர்... ... 39
3. ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிக கவிதா விஷய விமர்சம் ஸ்ரீ உ.வே. வித்வான் த. வே. ஸ்ரீநிவாஸாசார்யர், திருச்சி... ... 47
4. புஸ்தக விமர்சம் 54
5. கடிதங்கள் 58
6. பத்ராதிபரின் குறிப்புகள்:— 59
7. ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹம்—ஸ்ரீ உ.வே. வாஸுதேவாசார்யர் ... 193

வைரங்கள்.

T. B. MEHTA & SONS,

DIAMOND MERCHANTS,

453, Mint Street, P.T. Madras.

Phone No. 3555.

ப்ரவணர்களான லளித மநஸ்ஸை உடையவர்களுக்கு, சாந்தி ரஸத்தை முக்ய மாக உடைய உம்முடைய நாடகம் எப்படி ரஞ்ஜகமாகும்?' என்னும் ஆக்ஷேபங்களைப் பரிஹரிக்க எண்ணங்கொண்டு கூறுகிறார் நம் ஸ்வாமி. ரஸ மூர்த்தியான ஆநந்த மயனென்னும் பரமாத்மாவை விஷயீகரிக்கும் ரஸமாகிய சாந்தி ரஸம் முக்யமான ரஸமன்று என்று ரஸிகர்கள் சொல்வார்களா? எல்லா ரஸங்களுக்கும் ரஸ ஸ்வரூபனான பரமாத்மா தானே உத்பத்தி ஸ்தாநம். அவனுடைய ஆநந்தத்தில் ஏகதேசம் பிச்சை வாங்கித் தானே விஷயங்கள் ஸுகத்தைக் கொடுக்கக் கூடும். சாந்தி ரஸத்துக்கு நிலையான ஸ்தாயிபாவமான நிர்வேதம் மம்மடருடைய காவ்ய ப்ரகாசத்தில் 'நிர்வேதஸ்தாயிபாவோஸ்தி சாந்தோபி நவமோ ரஸ:' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த ச்லோகத்தில் 'நவமோ ரஸ:' என்கிற வார்த்தைகளே ஸ்வாமியால் இங்கே ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கின்றன. அந்த ப்ரமாண பலத்தைக் காட்ட "ஸ்தித:" என்பதற்கு இல்லை யென்றும் பூர்வ பக்ஷத்தைத் தள்ளி இருக்கிறது என்றும் உறுதிமொழியில் நோக்கு. இந்த பாவம் தான் காவ்ய ப்ரகாச ச்லோகத்தில் 'அஸ்தி' என்று சொல்லப்பட்டுள்ளது. அதை 'ஸ்தித:' என்பதினால் ஸ்வாமி ஜ்ஞாபகப்படுத்துகிறார். ஸ்திரமாய் ஆரம்பம் முதல் முடிவுவரையில் நிலைநிற்கிற ரஸம் ஸ்வல்பகாலம் வந்து ஓடிப்போகும் வ்யபிசாரிபான பாவமல்ல என்றும் அதற்கு அர்த்தம். இதற்கு நிலைநின்ற பாவமான நிர்வேதம், வந்தோடும் வ்யபிசாரி பாவங்களில் முதலாவதாகவும் சொல்லப்பட்டிருக்கின்றது. அதனால் நிலைநின்ற பாவமாகுமோ என்கிற ஸம்சயம், நிலைநின்ற பாவங்களுக் கடுத்தாற்போல் வ்யபிசாரி பாவங்களுக்கு முந்தி, அதாவது இரண்டிற்கும் நடுவில் வைத்திருக்கும் ஸ்வாரஸ்யத்தைக் கொண்டு பரிஹரிக்கப்பட்டிருக்கிறது. க்ஷணகாலம் வந்து ஓடிப்போகும் ப்ரஸவ வைராக்யம் போன்ற நிர்வேதமானால் அது வ்யபிசாரி பாவத்தைச் சேரும்; நிலைநின்ற வைராக்ய பாவமாக நீடித்து இருந்தால் அது சாந்தி ரஸத்துக்கு ஸ்தாயிபாவமாகும். தத்வ ஜ்ஞாநத்தால் பிறந்த வைராக்யமானால் அந்த நிர்வேதம் ரஸத்துக்கு ஆதாரமான நிலைநின்ற பாவமாகும். ஆபத்து கோபம் முதலிய காரணங்களால் க்ஷணகாலம் உதித்து நாசமடையும் நிர்வேதம் வ்யபிசாரி பாவமாகும். இரண்டு விதமான ஆகாரமும் இதற்கு இருப்பதால் இது இரண்டிற்கும் நடுவில் சொல்லப்பட்டது. "நாட்யே" என்கிற பதம் "அஷ்டௌ நாட்யே ரஸா: ஸ்ம்ருதா:' என்று ஆக்ஷேபத்தை விளைவிக்கும் வசநத்தைக் காட்டுகிறது. ஒன்பதாவதா யிருந்தாலும் இந்த ரஸம் கடைசியானது (இளப்பமானது) அன்றென்பதை "நவமோऽநவமோ ரஸ:" என்று மிகவும் அழகாகச் சொல்லியிருக்கிறது. தேவதைகளுக்குள் 'அக்நி:' 'அவம:' என்றும் 'விஷ்ணு: பரம:' என்றும் வேதம் சொல்லுகிறது. விஷ்ணு

ஸம்பந்தியான ரஸம் எப்படி அவமம் ஆகும் என்பதும் அபிப்ராயம் ஒன்பதாவது ஆகிறதில்லை யென்கிற விநோதத்தையும் அது வேடிக்கையாகக் காட்டுகிறது. 'யஸ்மிந்' என்கிற ஸப்தமியினால், 'யத்ர நாந்யத் பச்யதி நாந்யச்ச்ருணோதி நாந்யத் விஜாநாதி ஸ பூமா' என்கிற பூம வித்யையில் சொல்லப்பட்ட "யத்ர" என்னும் ஏழாம் வேற்றுமையின் அர்த்தத்தை யுடைய பதம் ஜ்ஞாபகப்படுத்தப்படுகிறது. எந்த நாட்யம் அநுபவிக்கப்படும் பொழுது விமலிதவேத்யாந்தரமாக சாந்தி ரஸம் ஒன்றே அநுபவ கோசரமாய் நிலைநிற்குமோ அந்த நாடகம் என்று பாவம் வ்யஞ்ஜிக்கப்படுகிறது. வேறொன்றையும் நினைக்காமல் வேறொன்றும் புலப்படாமல் எது ஒன்றே அநுபவ விஷயமாகுமோ அதுவே ரஸத்தின் லக்ஷணம். 'ஸத்வோத்ரேகாதகண்ட ஸ்வப்ரகாசாநந்த சிந்மய: வேத்யாந்தரஸ்பர்சசூந்யோ ப்ரஹ்மாஸ்வாதஸஹோதர:' என்று காவ்யப்ரகாசத்தில் நிஷ்கர்ஷம். ப்ரஹ்மாஸம் போன்றது மற்ற ரஸம் என்றால் உபமாநமான ப்ரஹ்மாஸம் ரஸமில்லாமல் போகுமா? 'அவன் ரஸமல்லவா' 'அவன் ரஸமே' என்று வேதமும் ப்ரஹ்மத்தை ரஸமென்று சொல்லிற்று. பிறப்பிலியான பரமாத்மா பற்பல வேஷங்களோடு பிறந்து பெரிய நடன் (கூத்தாடி) ஆகிறான் என்று சொல்லப்படப் போகிறது. நாமெல்லோரும் பல ஜந்மங்கள் (அதாவது: பல வேஷங்கள்) எடுத்து, பூலோகமாகிய ரங்க பூமியில் கூத்தாடுகிறோம் என்றும் சொல்லப்படுகிறது. அதற்கு முன்பு, சாந்தி ரஸமும் பல வேஷங்களை எடுத்துக் கொண்டு கூத்தாடுகிறது என்று இங்கே அழகாகச் சொல்லப்படுகிறது. இந்த நாடகத்தில் சாந்தி ரஸம் பல வேஷங்களை எடுத்துக்கொண்டு நர்த்தநம் செய்கிறதென்று பாவம். 'பஹுதா விஜாயதே' என்று பெருமாள் விஷயத்தில் சொல்லப்போவதைப் போல் அவன் விஷயமான சாந்தி ரஸமும் பல வேஷங்களைப் போட்டுக்கொள்ளுகிறது. மநுஷ்யர்களுடைய குணங்களே நாடக பாத்ரங்களாக வேஷம் போட்டுக்கொண்டு ஆடப்படும் இந்த நாடகத்தில் முக்யமான ரஸமான ஒன்பதாவது ரஸமும், ச்ருங்காரம் முதலிய பல ரஸங்களின் வேஷத்தைப் போட்டுக்கொண்டு அந்த ரஸங்களில் ப்ராவண்யமுடைய லகுவான மநஸ்ஸையுடைய ஜநங்களையும் ஆவர்ஜநம் செய்து க்ரமேண தன் வசமாக்குகிறது. எப்படி யம நியமாதி கடிநமான யோகாங்கங்களால் கடிநமான யோகத்தை ஸாதிக்கும் யோகிகளுக்கு மட்டும் மனத்திற்குள் புலப்படுகிற ஈச்வரன் மாம்ஸ சக்ஷுஸ்ஸுக்களுக்கும் புலப்படும்படி அவதாரம் செய்து ஸகல மநுஜ நயந விஷயதையை அடைகிறானோ, அப்படியே விஷய ப்ராவண்யமுடைய லகு சித்தர்களையும் அவரவர்களுக்குப் பிடிக்கக்கூடிய ரஸம் போல வேஷங் கொண்டு சாந்தி ரஸம் இந்த நாடகத்

தில் நடிக்கிறது. சாந்தி ரஸத்துக்கு வேண்டிய ஸகல விஷயங்களையும் துறக்கும் வன்மையில்லாத பலஹீநமானதும் பள்ள மடையான விஷயங்களில் நோக்குடையதுமான லளித மனமுடையவர்களையும் ஸந்தோஷப்படுத்தி, அவர்களையும் சாந்தி ரஸத்தில் ருசி உள்ளவர்களாகச் செய்ய வேண்டியது நாடகத்தின் கார்யம். 'நாட்யம் பின்னருசேர் ஜநஸ்ய பஹுதாப்யேகம் ஸமாராதநம்' என்கிறபடி நாநா ரஸங்களில் ப்ரியமுடையவர்களையும் அவரவர்களுக்குப் ப்ரியமான வேஷத்துடன் சாந்தி ரஸத்தைக் காட்டி, மெள்ள மெள்ள அவர்களுக்கும் அந்த ரஸத்தில் ருசி உண்டு பண்ணப்படுகிறது. திடீரென்று நேராகச் சாந்தி ரஸத்தைக் காட்டினால் அவர்களுக்கு ருசி உண்டாகாது. கருண ரஸம் ஒன்றே முக்யமான ரஸமென்றும், மற்ற ரஸங்கள் அதனுடைய மாறுதலான ரூபங்கள் என்றும் பவபூதி கவி சொல்லுகிறார். சாந்தி ரஸத்திற்குள் மற்ற எட்டு ரஸங்களும் அடங்குகின்றன என்று மேலே எட்டாவது அங்கத்தில் நிரூபிக்கப் போகிறார். "ரஸாந்தர ஸம்பிகாஸு" என்று அல்பார்த்தத்தைச் சொல்லும் 'கவச்' என்னும் ப்ரத்யயத்தால் சாந்தி ரஸமே 'ரஸஸாரா' என்றும், மற்ற ரஸங்கள் அல்பமென்றும் சிற்றின்பங்களென்றும் ஸூசிக்கப்படுகின்றன. மற்ற ரஸ வேஷங்களை அப்பொழுதைப் பொழுது நடுவில் தரித்தாலும் இந்த ரஸமே நிலையாக நிற்கிறது என்பது 'ஸ்தித:' என்பதால் சொல்லப்படுகிறது. காந்தா ஸம்மிதமான உபதேசம் செய்வது காவ்ய லக்ஷணம். அநேக ஜந்ம ஸஹஸ்ரங்களையுடைய ஸம்ஸார மார்க்கத்தில் நடந்து புழுதி படிந்த முழங்கால்களையுடைய நம்முடைய முழங்காலால், இனி நடக்கவேண்டிய ச்ரமத்தைத் தீர்ப்பதற்கு இந்த நாடகத்தில் வேஷமெடுத்து ஆடும் நம்முடைய குணங்களின் முழங்காலால் ஆடும் ஆட்டத்தைப் பார்த்து அநுபவிப்பது உபாயமாகும். இந்த ஆட்டத்தைப் பார்த்து பாவத்தை உட்கொண்டால், இனி நாம் வேஷமெடுத்து ஆடவேண்டியதில்லாமல் ஜந்மம் தொலைந்து போகும். நம்முடைய குணங்களாகிய விவேகம் காமம் கோபம் ஸுமதி முதலியவைகள் இங்கே நாடக பாத்ரங்களாகக் கூறப்படுகின்றன. ஸபையென்னும் பரிஷத்தை இந்த நடர்களுடைய பரிஷத் ஸந்தோஷப்படுத்தும் என்பது "நடபரிஷதா" என்பதினால் ஸூசிக்கப்படுகிறது. இந்த முழங்கால் ஆட்டத்தைப் பார்த்தால் இனி நமக்கு ஸம்ஸார மார்க்கத்தில் முழங்கால் நடை ச்ரமம் இல்லையென்று வேடிக்கையாய்க் காட்டப்படுகிறது. உள்ளேயிருக்கும் குணங்கள் உள்ளுக்குள்ளே நர்த்தநம் செய்து நம்மை ஆட்டிவைக்கிறது என்பதை நாம் தெரிந்து கொள்ளாததால் அந்தக் குணங்களுக்கு இடங் கொடுக்கிறோம். அந்தக் குணங்களை வெளிப்படையாக நம் கண்ணுக்கெதிரே மநுஷ்ய வேஷம் போட்டுக்கொண்டு ஆடுவதையும் ஆட்டிவைப்பதையும் நன்றாய் அநுபவத்துக்கு வரும்படி நமக்குக் காட்டிவிட்டால், நாம் கெட்ட குணங்களுக்கு இடம் கொடுக்கமாட்டோம்.

தவிர, அந்தக் கெட்ட குணங்களையும் அடக்க வேண்டிய உபாயமாகிய நல்ல குணங்களைக் கைப்பற்றுதலும் இவ்வாட்டத்தில் காட்டப்படுகிறது. உள்ளே நல்ல குணங்களுக்கும் கெட்ட குணங்களுக்கும் நடக்கும் கலஹத்தையும் சண்டையையும் வெளிப்படையாய்க் காட்டி, நல்ல குணங்கள் ஜயிக்க வேண்டிய வழியையும் காட்டிவிட்டால், உள்ளே அந்த வழியாக விவேக ஜயத்தை ஏற்படுத்திக் கொள்வது ஸுலபமாகும். அந்தந்தக் குணங்கள் அவ்வவற்றிற்கு உரிய தேவதைகளின் வேஷங்களுடன் பாத்ரங்களாக இந்த நவீநமான நாடகத்தில் நடிக்கிறார்களென்று மேலொரு ச்லோகத்தில் சொல்லுகிறார். ஸங்கல்பம் என்னும் ஒரு மநோபாவத்தை ப்ரயோஜநமாக உண்டாக்கவேண்டிய இந்த நாடகத்தில் புருஷகுணங்கள் நடர்களாவது உசிதம் என்று பாவம். ஸத்துக்களான பெரியோர்களுக்கு இந்த நாடகத்தால் ரஸாஸ்வாதத்தை வ்ருத்தி செய்யவேண்டுமென்று இந்த ச்லோகத்தின் கடைசியில் சொல்லுவதற்கு, ஏற்கெனவே சாந்திரஸத்தில் ருசியுடைய பெரியோர்களுக்கு அந்த ரஸத்தை வ்ருத்தி செய்யவேண்டுமென்றும், முன்பு அதில் ருசியில்லாத லளித மநஸ்ஸையுடையவர்களுக்கு மெள்ள மெள்ள வேறு ரஸங்களின் உருவத்தைக் காட்டி சாந்தி ரஸத்தைப் புதிதாய் உண்டுபண்ண வேண்டுமென்றும் தாத்பர்யம்.

'ரூபீவ ஸஞ்ஜித ஸம்ஸ்நேவ' என்பதனால் தமக்குக் 'கவி தார்க்கிக ஸிம்ஹம்' என்கிற பெயரைக்காட்டிலும் 'குசீலவ ஸிம்ஹம்' என்கிற பிருதில் அதிக த்ருப்தி என்பது வேடிக்கையாக ஸூசிக்கப்படுகிறது. "தைவகாருண்யநிதிநா" என்பதால் பூலோக வைகுண்டமே நாடக ரங்கமாக அமையும் பொழுது அதற்கு அநுகுணமாக மோக்ஷநாடகத்தை அங்கே ஆடுவது உசிதம் என்று காட்டப்படுகிறது. 'ஸ்ரீரங்கமாகிய இங்கேயே நீர் ஸுகமாக இரும்' என்று பெரிய பெருமாள் நியமநத்தில், நாடக ஸ்தலமாகிய ரங்கத்தில் ஸுகமான இருப்பு அத்யாத்ம வித்யா விமர்ச ப்ரவசநாதிகளை விட அத்யாத்ம நாடகம் செய்வதிலும் அதை ஆட்டிவைப்பதிலும் மிகவும் ஸ்வரஸமாய் அந்வயிக்கும் என்று ஸூசிக்கப்படுகிறது. 'விநோத' சப்தத்தால். "ஸப்ரதிஜ்ஞம்" என்பதினால் இந்த நாடகம் செய்வதற்கு முன் செய்வதாக ஸபையில் ப்ரதிஜ்ஞை செய்ததாக ஏற்படுகிறது. வேறொரு வேதாந்த நாடகம் ஸபையோர்கள் முன்பு கொண்டுவரப்பட்டு நமது தர்சநத்திற்கு அநுகுணமாக நாடகம் செய்யவேண்டுமென்று பெரியோர்கள் ஆஜ்ஞாபித்து அதை முன்னிட்டுச் செய்வதாக ப்ரதிஜ்ஞை செய்து நாடகம் செய்யப்படுகிறது. "விசேஷாஜ்ஞா" என்பதனால் அதிகரண ஸாராவளி செய்யும்படி பெரிய பெருமாள் நியமித்ததுபோலல்லாமல் பெரியோர்களின் நியமநத்தைக் கொண்டு செய்வதாகச் சொல்லப்படுகிறது.

“கௌந்தேய ப்ரதிஜாநீஹி” என்கிறபடி பெரியோர்கள் நியமித்த உடனே ப்ரதிஜ்ஞை செய்யப்படுகிறது. “திவ்யப்ரபந்த அபிநய ஸாக்ஷிண:” என்பதினால், திவ்ய ப்ரபந்தங்களின் அபிநயங்களையும் நர்த்தநங்களையும் மிகவும் கவனத்துடன் பார்த்து ரமிப்பதில் குதூஹலமுள்ளவர்கள் திவ்ய நாடகத்தைப் பார்க்க விரும்புவது ஸஹஜம் என்று தெரிகிறது. பரத சாஸ்த்ரத்திற்கு ஒத்தபடி திவ்யப்ரபந்தங்களை அபிநய நர்த்தநங்களுடன் ஸ்ரீரங்கநாதனுடைய திருவோலக்கத்தில் சாச்வதமாய் நடக்கும்படி ஒரு ஸம்ப்ரதாயத்தை யோகி ஸார்வபௌமரான ஸ்ரீ ரங்கநாத முநிகள் ஏற்படுத்தித் தமது பரம்பரையில் பரத சாஸ்த்ர தேவதைகளைப் போன்ற அரையர் குலத்தாரால் ஆடப்படும் அத்யாத்ம விஷயமான பகவத் விஷய ப்ரபந்தங்களை எப்பொழுதும் மஹோத்ஸவங்களில் பார்த்துக் களிப்பதால், ஸ்ரீ ரங்கத்தில் உத்ஸவத்தில் கூடியிருக்கும் பெரியோர்களெல்லாரும் பாதாகம தைவதங்கள் என்று சொல்லப்படுகிறார்கள். அரையர் ஸம்ப்ரதாயத்தை ஏற்படுத்தி வைத்ததால் அவருக்கு ஸ்ரீரங்கநாதமுநி யென்ற பெயர் காரணப்பெயருமாகும். கேவலம் நாயக நாயகி பாவங்களை அபிநயிக்கும்படியான நாட்யத்தின் ஸ்வரூபமும், தாளத்தையும் லயத்தையும் அநுஸரித்து அபிநயமில்லாமல் அங்க விக்ஷேபம் மட்டும் செய்யும் தேசியின் ஸ்வரூபமும், இரண்டும் கலந்த மார்க்கத்தின் ஸ்வரூபமும் நன்கு உணர்ந்த பெரியோர்கள் நிறைந்த ஸபை, பரதசாஸ்த்ரத்தில் பகவத் விஷயமல்லாத அல்பமான சில்வான விஷயங்களையும் அபிநயம் செய்து காட்டக்கூடிய தாகையால், அவர்கள் அவற்றை விலக்கினவர்களென்றும் அவற்றைக் கண்ணெடுத்துப் பார்க்காதவர்களென்றும் “அவதீரித வாத்ய ஸேவா:” என்பதனால் சொல்லப்படுகின்றன.

‘பரமைகாந்தியாயிருப்பவர் நாடகம் எழுதி அதை நடிக்கச் செய்யலாமா?’என்று ஆக்ஷேபிக்கப்பட்டால், ‘எங்கள் ஆதிதேவதையாகிய பெருமாள் பல வேஷங்கள் தரித்து நாடகமாடுகிறவ ராகையால் ஸ்வாமியினுடைய சீலம் போல் தாஸனுடைய சீலமும் இருப்பது உசிதம்’ என்று பதில் ஸூசிக்கப்படுகிறது.

“ப்ராசீ ஸந்த்யா காசிதந்தர் நிசாயா: ப்ரஜ்ஞாத்ருஷ்டேரஞ்ஜநஸ்ரீரபூர்வா। வக்த்ரீ வேதாந் பாது மே வாஜிவக்த்ரோ வாகீசாக்யா வாஸுதேவஸ்ய மூர்த்தி:॥”

ஸங்கல்ப ஸூர்யன் எங்கே உதிக்கும்? கிழக்குத் திக்கில் ஸூர்யோதயமாகும். ஜ்ஞாநத்தால் மோக்ஷம் கிடைக்கும். ஞானப் பிரானாகிய வெள்ளைப் பரிமுகர் மோக்ஷத்திற்கு வேண்டிய ஜ்ஞாநத்தைக் கொடுப்பார். கிழக்கு

ஸந்த்யா காலத்தில் ஸூர்யோதயம் ஆவதால் மோக்ஷ ஸங்கல்ப ஸூர்யன் உதிக்கும்படியான ஹயக்ரீவனை “ப்ராசீ ஸந்த்யா” என்று ரூபணம் செய்யப்படுகிறது. தன்னை மோக்ஷணம் செய்யும் ஸங்கல்ப ஸூர்யன் இந்தக் கிழக்கு ஸந்த்யையில் உதிக்க வேணுமென்று மநோரதம். “அஞ்ஜநம் யோமத்ருஷ்டே:” என்று கருமுகில் வண்ணனை பெரிய பெருமாளைச் சொல்வது உசிதமாகும். ச்வேதாத்வைதமான தேஜஸ்ஸையுடைய வெள்ளைப் பரிமுகரைக் கண்ணுக்கு மையென்று சொல்லலாமோ? இது ஒரு அபூர்வமான அஞ்ஜநம் என்று பதில் சொல்லப்படுகிறது. ஜ்ஞாநக் கண்ணை ப்ரகாசப்படுத்தும் ஸத்வமயமான அஞ்ஜநம் ஸத்வத்திற்குள்ள வெண்மை நிறத்தையுடையது. ‘அபூர்வா’ என்பது கிழக்கல்லாதது என்றும் அர்த்தம் ஆவதால், அது விநோதமாயும் வேடிக்கையாயும் காட்டப்படுகிறது. காலை ஸந்த்யையில் வேதங்களை அப்யாஸம் செய்வது வழக்கம். காலை ஸந்த்யையான ஹயக்ரீவ மூர்த்தி வேதங்களைச் சொல்லி வைப்பது உசிதம் என்பது பாவம். உதயத்திற்கு முன் குதிரைகளைப் பார்ப்பது மங்களமாகும்.

(தொடரும்.)

ஸ்ரீ:

ஸ்ரீ ராமாநுஜாசார்யரும் ஸ்ரீகண்டாசார்யரும்.

(ஸ்ரீ உப. வித்வான் புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யர்.)

‘க்ருஷ்ண த்வைபாயநம் வ்யாஸம் வித்தி நாராயணம் ப்ரபும்’ என்று ஸ்ரீ பராசர ப்ரஹ்ம ரிஷியினால் ஸ்ரீமந் நாராயணனுடைய அவதாரமென்று அருளிச் செய்யப்பட்டவரான ஸ்ரீ வ்யாஸ மஹர்ஷியினால் அருளிச் செய்யப்பட்ட ப்ரஹ்ம ஸூத்ரங்களுக்கு உபாக்யாநங்களாக இக்காலத்தில் காணப்படும் பஹுவிதங்களான பாஷ்யங்களுக்குள் ஸ்ரீ பகவத் ராமாநுஜ க்ருதமான ஸ்ரீ பாஷ்யமும் ஸ்ரீ கண்டாசார்ய க்ருதமான சைவ பாஷ்யமும், ப்ரதாநமான இரண்டொரு அம்சங்களில் தவிர, ப்ராயேண எல்லா அதிகரணங்களிலும் விஷயாதி பஞ்சகங்களில் ஒரே ரீதியாகக் காணப்படுகின்றன. அதனால் இவ்விரண்டு பாஷ்யங்களுக்குள் ஒன்றைப் பார்த்து மற்றொன்று செய்யப்பட்டதாக இருக்கலாமென்று ஊஹிக்க இடம் ஏற்படுகிறது. இவ்விரண்டு பாஷ்யங்களுடைய அவதார கால விசேஷங்கள் இன்னவென நிச்சயிக்கப்பட்டாலொழிய, ‘இது முந்தியது இது பிந்தியது’ என்று தீர்மா

னிக்க முடியாது. இவ்விரண்டு க்ரந்தங்களின் உத்பத்திகால விசேஷத்தைச் சிலர் விசாரித்திருக்கிறார்கள். எந்த க்ரந்தம் முந்தி உண்டானதாக இருந்தாலும், எது பிந்தி உண்டானதாக இருந்தாலும், 'எந்த க்ரந்தம் ச்ருத்யாதி ப்ரமாணங்களுக்குப் பொருந்தி யிருக்கிறது ? எது பொருந்தாம லிருக்கிறது?' என்பதை நன்கு விசாரித்து, எது ப்ரமாணங்களுக்கு அநுகுணமாக இருக்கிறதோ அதைப் பரிக்ரஹிப்பதும், ப்ரமாணங்களுக்குப் பொருந்தாத க்ரந்தத்தைப் பரித்யஜிப்பதுமே பண்டிதர்களின் க்ருத்யமாகும்.

முந்தி உண்டான க்ரந்தங்களெல்லாம் ப்ரமாணங்களென்றும், பிந்தி உண்டானவைகள் அப்ரமாணங்களென்றும் ஒருவரும் சொல்லத் துணியார். ஸ்ரீபகவத் ராமாநுஜ பாஷ்யத்திற்கு முந்தி உண்டானதென்றே யாவராலும் அங்கீகரிக்கப்பட்ட சங்கராதி பாஷ்யங்களை, ஸத்யவாதிகளான ப்ராமாணிகர்கள் எவரேனும் ப்ரமாணமென்று அங்கீகரித்திருக்கிறார்களா? இல்லையே. ப்ரத்யுத, மேற்படி க்ரந்தங்களில் ப்ரத்பதி:ரணங்களிலு மிருக்கும் ப்ரமாண விருத்தாம்சங்களை எடுத்துக் காட்டிப் பரக்கத் தூஷித்திருப்பதை நாம் பார்த்து வருகிறோம். ஆகையால் இவ்விரண்டு க்ரந்தங்களின் பௌர்வாபர்யத்தைப் பற்றி விசாரம் செய்வது ஆவச்யகமென்று அநேகருக்குத் தோன்றுவிட்டாலும், சில ரஸிகர்கள் இந்த விஷயத்தை விசாரித்துத் தீர்மானித்திருப்பதால், இதன் வாஸ்தவார்த்தத்தை யாவரும் அறிவதற்காக இவ்விஷயத்தில் நாமும் ப்ரவர்த்திக்க வேண்டியது அவச்யமாகிறது.

ஸ்ரீகண்ட பாஷ்யாரம்பத்தில் 'வ்யாஸஸூத்ரமிதம் நேத்ரம் விதுஷாம் ப்ரஹ்மதர்சநே । பூர்வாசார்யை: கலுஷிதம் ஸ்ரீகண்டேந ப்ரஸாத்யதே ॥'' என்கிற ச்லோகத்தினுல், முந்தி இருந்த சில ஆசார்யர்கள் ப்ரஹ்ம ஸூத்ரத்திற்கு விபரீதமாக வ்யாக்யாநம் செய்து விட்டதாவும், தாம் ஸரியான வ்யாக்யாநம் செய்வதாவும் ஸ்ரீகண்டாசார்யர் எழுதியிருக்கிறார். இதற்கு வ்யாக்யாநம் செய்த அப்பய்ய தீக்ஷிதர், பூர்வாசார்யர்கள் செய்த விபரீத வ்யாக்யாநங்களை உதாஹரிக்கு மிடத்தில், 'பிறர் தோஷங்களை வெளியிடாம லிருப்பது ஸ்ரீகண்டாசார்யருக்கும் ஸ்வபாவ மாகையால் 'பூர்வாசார்யை: கலுஷிதம்' என்று ஸாமாந்யமாகச் சொன்னர்; ஆகையால் முந்தின பாஷ்யங்களிலுள்ள அத்யாஹாராதி தோஷங்களை எல்லாரும் அறிந்து கொள்ளும்படி நாம் திங்மாத்ரமாகக் குறிப்பிட்டுக் காட்டுகிறோம்' என்று ப்ரதிஜ்ஞை பண்ணிக்கொண்டு தூஷிக்க ஆரம்பிக்கிறார். அவ்விஷயங்கள் யாவும் ஸ்ரீபகவத் ராமாநுஜ பாஷ்யம் ஒன்றிலேயே காணப்படுவதால், ஸ்ரீகண்ட பாஷ்யமே பிந்தினதென்று தீர்மானிக்க இடம் உண்டாகிறது. ததாஹி—சிவார்க்கமணி தீபிகையில் மேற்படி ச்லோக வ்யாக்யாநத்

தில், 'ஸர்வோபேதா ச தத்தர்சநாத்' என்கிற ஸூத்ரத்தில் 'ஸர்வோபேதா' என்கிற பதத்திற்கு 'ஸர்வ சக்தியுடன் கூடினது' என்று அர்த்தம் பண்ணிக்கொண்டு, ஸ்த்ரீ லிங்க நிர்த்தேசத்தை அநுஸரித்து, 'தேவதா' என்கிற பதத்தினுடைய அத்யாஹாரம் முந்தின பாஷ்யத்தில் செய்யப்பட்டிருக்கிறது. இது பூர்வாபர விருத்தம் என்று தூஷித்து, மேல், 'ச ப்ரக்ருதிவிசிஷ்ட ப்ரஹ்மவாதிநாமேவ ப்ரக்ருதிரேவ ஸர்வோபாதாநமிதி ।' இத்யாதிகளினுல், 'ப்ரக்ருதியோடு கூடின ப்ரஹ்மமே ஜகத் காரணம்' என்கிற விசிஷ்டாத்வைத மதத்தை அநுஸரித்துச் சங்கிப்பதாலும், மேல் ஸமாதாநத்திலும் "ஸூக்ஷ்மசிதசித்வஸ்துசரீரகம் ப்ரஹ்ம காரணம் ஸ்தூலசிதசித்வஸ்துசரீரகம் ப்ரஹ்ம கார்யமிதி வாதே ப்ரஹ்மண: ஸர்வகார்யத்வம் ஜகதேகதேசாநாம் ச ப்ரக்ருத்யாதீநாம் காரணத்வம் ஸித்யதி" என்பது முதலான பங்க்திகளினுலும், சேதநா சேதநங்களைச் சரீரமாகவுடைய ப்ரஹ்மத்துக்குக் கார்யகாரண பாவத்தையும், ப்ரஹ்மத்துக்கும் ஜகத்துக்கும் சரீராத்ம பாவத்துக்கும் ஸம்பந்தத்தையும் சிதசிதீச்வர பேதத்தையும், ஸ்ரீபகவத் ராமாநுஜ பாஷ்யம் ஒன்றில் மட்டும் அங்கீகரித்திருப்பதை அநுவதித்திருப்பதாலும், கீழ்ச்சொன்ன தேவதா பதாத்யாஹாரமும் ஸ்ரீபகவத் ராமாநுஜ பாஷ்யத்திலேயே காணப்படுவதாலும் இந்தத் தூஷணம் முழுவதும் ஸ்ரீ பகவத் ராமாநுஜ பாஷ்யத்தை விஷயமாக உடையதென்பது வ்யக்தமாகிறது.

ஆனல் சங்கர பாஷ்யத்திலும் மேற்படி ஸூத்ரத்தில் 'தேவதா' பதம் அத்யாஹரிக்கப்பட்டிருந்தாலும், அதைத் தீக்ஷிதர் சங்கித்துக் கொண்டு அதற்கொரு பலத்தைக் கல்பித்து, அந்த அத்யாஹாரத்தைக் குணமாக எழுதியிருக்கிறார். மேலும், க்ரந்தாரம்பத்தில், "யத்வேதாந்த ஸர்வச்ருதிவிரோதிநாம் மதம் த்ரயீ" என்று அத்வைத மதமே ஸர்வ ப்ரமாணங்களுக்குப் பொருந்தினதாகவும், 'ப்ரஸந்நோ ஆயதோ தேவ: ஸர்வஜ்ஞ: சங்கராசார்யரூபேண' என்று சங்கராசார்யரை ஆசார்ய ரத்நமென்றும், சிவனுடைய உபாஸநத்தினுல் தான் புருஷர்களுக்கு அத்வைத ஜ்ஞாநம் உண்டாகிறதென்றும் சொல்லி ப்ரசம்ஸித்திருக்கிறார். இத்யாதியான காரணங்களால் இந்தத் தூஷணம் சங்கர பாஷ்ய விஷயமாக இருக்கமாட்டாது.

பாஞ்சராத்ராதிகரணத்தில் 'விப்ரதிஷேதாச்ச' என்கிற ஸூத்ரத்தில் இருக்கும் 'விப்ரதிஷேத' சப்தம் ஜீவோத்பத்தி நிஷேத வாசகமென்று ஸ்ரீ பகவத் ராமாநுஜ பாஷ்யத்தில் அருளிச் செய்திருப்பது அநுசிதமென்று ஸ்ரீகண்ட பாஷ்யத்தில் தூஷிக்கப்பட்டிருக்கிறது.

இதைத் தீக்ஷிதர் பாஞ்சராத்ரத்திற்கு ப்ராமாண்யத்தை ஸமர்த்திப்பதற்காக 'விப்ரதிஷேத்' சப்தத்திற்கு 'நிஷேதம்' அர்த்தமாகச் சொன்னது அநுசிதமென்று பலபடியாகத் தூஷிக்கிறார். மற்ற ஒரு பாஷ்யத்திலும் இந்த 'விப்ரதிஷேத்' சப்தத்திற்கு நிஷேதம் அர்த்தமாகச் சொல்லப்படாததாலும், பாஞ்சராத்திற்கு ப்ராமாண்யத்தை ஸ்ரீபகவத் ராமாநுஜ பாஷ்யம் ஒன்றிலுமே பாரதாதி ப்ரமாணங்களைக் காட்டி ஸமர்த்திக்கையாலும், இந்தத் தூஷணமும் ஸ்ரீபகவத் ராமாநுஜ பாஷ்ய விஷயமென்பது நிச்சயம். இவ் விஷயம் மேற்படி ஸூத்ர ஸ்ரீகண்ட பாஷ்யத்தில், 'एवं जीवोत्पत्तिप्रतिषेधेऽपि, संसारात्मनः ... कारणवादे उक्तिरेतस्य तदुक्तकारणादि ... वाचकादीनां विप्रतिषेधात्' என்கிற பருஷ வாக்யங்களிலும் வ்யக்தமாகிறது.

இதற்கு மேல் தீக்ஷிதர், 'अनाकारते स्वात् च' என்கிற ஸூத்ரத்தில் இருக்கிற விஷயங்கள் அஸங்கதங்களென்று ஸ்ரீ கண்டாசார்யரின் அபிப்ராயமாகத் தூஷிக்கிறார். அங்கு 'सांख्यवैशेषिक' என்று ஆரம்பித்து, '... ज्ञानं प्रमाणं ... ' என்று ஸ்ரீ பகவத் ராமாநுஜ பாஷ்ய பங்க்திகளையே அநுவதித்தும், அங்குச் சொன்ன சில விஷயங்களையும் தூஷிக்கிறார். சங்கராதி மற்ற பாஷ்யங்களில் தீக்ஷிதரால் தூஷிக்கப்படும் விஷயங்கள் இல்லாததாலும், பரமாத்மாவோடு ஜீவாத்மாவுக்குப் பரம ஸாம்யம் ஸ்ரீ பாஷ்யத்திலேயே சொல்லப்பட்டிருப்பதாலும், ஸ்ரீபாஷ்ய பங்க்திகளையே அநுவதித்திருப்பதாலும் இந்தத் தூஷணமும் ஸ்ரீ பகவத் ராமாநுஜ பாஷ்ய விஷயமென்பது வ்யக்தமாகின்றது.

இங்குத் தீக்ஷிதர் சொல்லியிருக்கும் தூஷணங்களையும் அவற்றின் பரிஹாரங்களையும் எழுதுவது அபேக்ஷிதமன்றாகையாலும், அவை க்ரந்த விஸ்தரத்தை உண்டுபண்ணுமாகையாலும் எழுதப்படவில்லை. ஸ்ரீ பகவத் ராமாநுஜ பாஷ்யத்தை அநுவதித்து ஸ்ரீ கண்டாசார்யர் 'व्यासार्यैः कटाक्षितम्' என்று சொல்லியிருப்பதாகத் தீக்ஷிதர் எழுதியிருப்பதால், ஸ்ரீபகவத் ராமாநுஜ பாஷ்யம் முந்தி இருந்ததென்பதும், ஸ்ரீகண்ட பாஷ்யம் பிந்தி உண்டானதென்பதும் வ்யக்தமாகின்றன என்னும் விஷயத்தை மட்டும் இங்குக் குறிப்பிடுவோம்.

சாஸ்த்ர யோநித்வாதிகரணத்தில், 'ब्रह्मणः प्रतिपादकत्वेऽपि प्रतिज्ञायाः ... सर्वं ... शास्त्रप्रामाण्यात् ... शास्त्रैकप्रमाणकत्वं ... तत्त्वविद्भिरेव ।' என்று தீக்ஷிதர் தூஷித்திருக்கிறார். இதுவும் ஸ்ரீபாஷ்யத்தில் சொல்லப்பட்டிருக்கும் சாஸ்த்ரத்தையும் ப்ரமாணத்வத்தையும் ஷை அதிகரணத்தில் 'शास्त्रैकप्रमाणकत्वं ... विशिष्टत्वं ...' என்றும் 'अतः ... शास्त्रयोनित्वात् इति भावः' என்றும் இருக்கிற ச்ருத ப்ரகாசிகா பங்க்திகளையும் அநுவதித்து விஷயத்தையும் தூஷித்திருப்பதாலும் இந்தத் தூஷணமும் ஸ்ரீ பாஷ்யாதி க்ரந்த விஷயமென்பது நிச்சயம்.

ஆக, இதனால் வ்யாஸஸூத்ரத்திற்குப் பூர்வாசார்யர்கள் விபரீதமாக வ்யாக்யானம் செய்திருப்பதாக ஸ்ரீ கண்டாசார்யருடைய அபிப்ராயத்தைத் திங் மாத்ரமாக உதாஹரித்துக் காட்டுவதாகச் சொல்லி, அப்பய்ய தீக்ஷிதர் உதாஹரித்த பூர்வாசார்ய வ்யாக்யானங்களெல்லாம் ஸ்ரீ பகவத் ராமாநுஜ க்ருதமான ஸ்ரீ பாஷ்ய விஷயங்களாகவே இருப்பதால், ஸ்ரீ பகவத்ராமாநுஜ பாஷ்ய கண்டனத்திற்காக ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீகண்ட பாஷ்யமானது பிந்தினதென்பது பாமரர்களுக்கும் வ்யக்தமாகும். ஆனபடியால் 'सांख्यादि ... श्रीकण्ठीयम्' என்று த்வைதாத்வைத விசிஷ்டாத்வைத பாஷ்யங்களுக்கும் முந்தி ஸ்ரீகண்ட பாஷ்யம் உண்டானதாக ஹாலாஸ்யநாத சாஸ்த்ரிகள் முதலானோர் எழுதியிருப்பது அப்ரமாணம் என்பதைப் பண்டிதர்கள் கவனியாமற் போகார். 'व्यासार्यैः कटाक्षितम्' என்றும், நாராயண பரத்வாதிகளையும் ஸ்ரீ வைஷ்ணவசாராதிகளையும் ஸ்ரீபாஞ்சராத்ர சாஸ்த்ராதிகளையும் பரக்கத் தூஷித்திருக்கும் ஸ்ரீ கண்டாசார்யரைப் பரமத தூஷணத்தில் ப்ரவர்த்திக்காதவர் என்று தீக்ஷிதாதிகள் எழுதியிருப்பதும் ஆச்சர்யப் படக்கூடிய விஷயம்.

இது நிற்க: ஸ்ரீகண்ட பாஷ்ய பங்க்திகளாலும் இந்த விஷயம் வ்யக்தமாகிறது. அந்தரதிகரண ஸ்ரீ கண்ட பாஷ்யத்தில் ஸ்ரீ கண்டர் 'य एषोऽन्तरादित्ये हिरण्मयः पुरुषः' இத்யாதியான விஷயவாக்யங்களை ருத்ரபரங்களாக ஸித்தாந்தம் செய்து, பிறகு, 'ध्येयः सदा सवितृमण्डलमध्यवर्ती नारायणः' என்று ஸூர்ய மண்டலாந்தர் வர்த்தியாக நாராயணனுக்கே ஸர்வலோக ப்ரஸித்தி இருப்பதாலும், 'यथा कप्यासं पुण्डरीकमेवमक्षिणी' என்கிற புண்டரீகாக்ஷத்வ ப்ரஸித்தியும் நாராயணனுக்கே இருக்கிறதென்றும், இங்கு 'अक्षिणी' என்று இரண்டு கண்ணுடையவனுக்

சொல்வதும் அவனுக்கே ஸங்கதமாவதோடு, இது முக்கண்ணனான சிவனுக்குப் பொருந்தாதென்றும் சங்கித்துக் கொண்டு, 'யஸ்யாயுதாயுத' என்கிற வசனம் பாக்தமென்றும், [புராணத்தில் நாராயண பக்தன் த்வாதசாதித்யர்களுள் ஒருவனான விஷ்ணு விஷயமாகச் சொன்னதென்றும்,] 'சக்ஷுஷ்மாநந்த ஏவ ஸ:' என்று அந்யத்ர ப்ரயோகமிருப்பதால் புண்டரீகாக்ஷத்வ ப்ரஸித்தியால் நாராயணனுக்கு அஸாதாரண மல்லவென்றும், சிவனுக்கு மூன்று கண்கள் இருந்தாலும் அலர்ந்த தாமரைபோன்ற கண்கள் இரண்டென்று 'கப்யாஸம்' என்ற வாக்யம் சொல்வதால் மூடின தாமரை போன்ற மற்றொரு கண் இருப்பதை ப்ரக்ருத வாக்யம் பாதிக்காதென்றும் சொல்லி காயத்ரீ ப்ரதிபாத்யன் ருத்ரன் என்றும் சொல்லி யிருக்கிறார்.

ஸ்ரீ பகவத் ராமாநுஜ பாஷ்யத்தில் இந்த உபநிஷத்வாக்யங்கள் நாராயணனையே சொல்லுகின்றனவென்று ஷடி அதிகரணத்தில் தீர்மானித்திருப்பதை ஸ்ரீ கண்ட பாஷ்யம் அர்த்தத: அநுவதித்துக் கண்டித்திருப்பதாலும், அந்த பாஷ்யம் முந்தினதாக இருந்தால் பரத்வ விஷயமாகையினாலே முக்யமான இவ்விஷயத்தை ஸ்ரீ பாஷ்யகாரர் கண்டிக்காமலிருக்க மாட்டாராகையாலும் ஸ்ரீ கண்ட பாஷ்யமே பிந்தி உண்டானதென்பது வ்யக்தமாகிறது. ப்ராமாணிகமான அர்த்தங்களை உலகத்தார் அறிந்து உஜ்ஜீவிப்பதற்காக க்ரந்த நிர்மாணம் செய்யும் பெரியோர், ஸ்வமத விருத்தங்களாயும் ப்ராமாணிகங்களல்லாத பர மத விஷயங்களைத் தூஷித்து எழுதுவதும் லோகோஜ்ஜீவநார்த்தமான க்ருபையின் கார்யமாகையாலும், மஹா விரக்தர்களான வ்யாஸாதிகள் இவ்விஷயத்தை (சாரீரகம் அத்யாயம் 2—பாதம்—2—ல்) அநுஷ்டித்துக் காண்பித்திருப்பதாலும், ப்ராமாணிகமான தமது மதத்திற்கு விருத்தமான அம்சங்களை வைராக்யத்தினால் தூஷிக்காமல் விட்டு விட்டார் ஸ்ரீ பாஷ்யகாரர் என்று சொல்வது உசிதமாகமாட்டாது.

வைச்வாநராதிகரண குணஸூத்ரமான 'ஸஹஸ்ரசீர்ஷா............ புருஷமேவேதம் ஸர்வம்' என்கிற ஸூத்ர ஸ்ரீபாஷ்யத்தில் 'ஸர்வாத்மநோ ஹி நிருபாதிகம் புருஷத்வம் யதா ஸஹஸ்ரசீர்ஷா புருஷ: புருஷ ஏவேதம் ஸர்வம் இத்யாதௌ' என்று நாராயணனே தான் புருஷ சப்தத்துக்கு முக்யமான அர்த்தமென்றும், வேதாந்தஸாரத்தில் புருஷ ஸூக்தம் நாராயணனையே சொல்வதாகவும் அருளிச்செய்யப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு விஷயங்களும் ஜ்யோதிரதிகரண ச்ருதப்ரகாசிகையிலும் விஸ்தாரமாக ப்ரமாணங்களுடன் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. ஷடி ஸூத்ர ஸ்ரீ கண்டபாஷ்யத்தில் 'நிருபாதிகபுருஷசப்த வாச்யத்வாத் புருஷஸூக்தம் ஸர்வம் புருஷேண ஸர்வமிதி ச்ருதௌ ச' என்று 'புருஷ' சப்தம் சிவனையே முக்யமாகச் சொல்லுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஸர்வ வ்யாக்யாநாதிகரண ஸ்ரீகண்ட பாஷ்யத்திலும் புருஷ ஸூக்தம் ஜீவனைச் சொல்வது உசிதமென்று பூர்வ பக்ஷம் பண்ணிக்கொண்டு 'புருஷஸூக்தாதிகம் ஸர்வமேவாயம்' என்று ஆரம்பித்து, 'அத ஸம்ஸார வ்யாவ்ருத்த புருஷசப்தஸ்ய உச்யதே' என்று புருஷ சப்த புருஷஸூக்தங்களும் சிவனையே சொல்வதாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஜ்யோதிரதிகரண ஸ்ரீகண்டபாஷ்யத்தில் 'ஸ ஸமஷ்டி ஸம்ப்ரஸாத' என்கிற உபநிஷத் வாக்யத்தை விஷயமாக எடுத்துக்கொண்டு, அங்கு ச்ருதமான 'ஸ உத்தம: புருஷ:' என்கிற புருஷோத்தம சப்தமானது ரூடி சக்தியினால் நாராயணனைச் சொல்லுகிறபடியால் ஸர்வவ்யாபகத்வம் ஜ்யோதிஸ்ஸ்வரூபமும் நாராயணனையே சொல்லக்கூடுமென்று சங்கித்துக் கொண்டு, புருஷோத்தம சப்தம் நாராயணனிடத்தில் ரூடமானாலும் இங்கு அது சிவனையே சொல்லுகிறது 'புருஷர்களான ஜீவர்களைக் காட்டிலும் உத்தமனாக இருப்பதால்' என்று புருஷோத்தம சப்தமும் ருத்ரனையே சொல்வதாகத் தீர்மானித்திருக்கிறார்.

இந்த ப்ரகரணங்களை நன்றாகக் கவனித்தால் ஸ்ரீ பகவத் ராமாநுஜ பாஷ்யத்தில் அருளிச் செய்யப்பட்ட புருஷ சப்தத்தினுடைய நாராயண பரத்வத்தைக் கண்டிப்பதற்காகவே அந்த வைச்வாநராதிகரணத்திலும், மற்றும் ஸர்வ வ்யாக்யாந ஜ்யோதிரதிகரணங்களிலும் புருஷ சப்தம் சிவனுக்கே போதகமென்றும், புருஷ ஸூக்தமும் புருஷோத்தம சப்தமும் கூடச் சிவனையே சொல்கின்றனவென்றும் ஸ்ரீ கண்டாசார்யர் ச்ரமப்பட்டு ஸமர்த்திக்க ஆசைப் படுகிறார் என்பது வ்யக்தமாகும். ஸ்ரீ பாஷ்யம் பிந்தி உண்டாகி யிருக்குமானால் ப்ரதாநமான இவ்விஷயத்தை ஸ்ரீ பாஷ்யகாரர் கண்டிக்காமல் இருக்க மாட்டாராகையால் ஸ்ரீ கண்ட பாஷ்யமே பிந்தினதாகிறது.

ஸ்ரீ பாஞ்சராத்ராதிகரணத்தில் சங்கராதி பாஷ்யங்களில் சொல்லப்படாமல் ஸ்ரீபகவத் ராமாநுஜ பாஷ்யத்தில் மட்டும் ஸித்தாந்தம் செய்யப்பட்டிருக்கும் அர்த்த விசேஷங்களை ஸ்ரீகண்டாசார்யர் அநுவதித்துக் கண்டித்திருப்பதாலும் ஸ்ரீகண்ட பாஷ்யமே பிந்தி உண்டானதென்று நிர்ணயிக்க இடமாகிறது. ஸ்ரீபாஞ்சராத்ரத்தில் 'ஸங்கர்ஷணோ நாம ஜீவோ ஜாயதே' என்பது முதலான வாக்யங்கள் ஜீவனுடைய உத்பத்தியைச் சொல்லுகிறதன்று, ஜீவாதிஷ்டாந தேவதா ரூபியான ஸங்கர்ஷண ரூப பகவதவதார விசேஷத்தைச் சொல்லுகிறது என்று சங்கரபாஷ்ய கண்டநார்த்தமாக ஸ்ரீ பாஷ்யகாரர் அருளிச்செய்திருக்கிறார். இந்த விஷயத்தை ஷடி அதிகரணம் ஸ்ரீகண்ட பாஷ்யத்தில் 'விஜ்ஞாநாதி பாவே வா' என்கிற ஸூத்ரத்தில் அநுவதித்து விட்டு, அடுத்த 'விப்ரதிஷேதாச்ச' என்கிற ஸூத்ரத்

தில் 'ஏவம் ஜீவோத்பத்திவாதே பரிஹ்ருதேபி ஸாம்ப்ரதாயிக ஸாங்க்ய-வாத: , ச்ருதிவிரோதாத் அஸ்வாதந்த்ர்ய காரணவாதி ப்ரஸக்திதோஷ நிரஸ்தா: ப்ரஸ்துதாநாமதிஷ்டாநாதிகரணாதிஷு விப்ரதிஷேதாச்ச ஸாம்ப்ரதாயிக ஸமஞ்ஜஸம்' என்று, ஷஷ்டி அதிகரண ஸ்ரீ பாஷ்யத்தில் ஸ்ரீ பாரத ப்ரமாணங்களை உதாஹரித்து அருளிச் செய்யப்பட்ட ஸ்ரீமந் நாராயணனுடைய ஜகத் காரணத்வம், மோக்ஷ ப்ரதத்வம், வைஷ்ணவர்களுடைய அடையாளமான 'க்ருதசக்ராங்கணை:' என்று சொல்லப்படும் தப்த முத்ரா தாரணம் முதலிய வற்றை வேத விருத்தங்களென்று வ்யக்தமாகத் தூஷித்திருப்பதால் ஸ்ரீ பகவத் ராமாநுஜ பாஷ்யம் முந்தினதென்பதும் ஸ்ரீ கண்ட பாஷ்யம் பிந்தி உண்டானதென்பதும் நன்கு விளங்குகிறது.

விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்கு முக்யமான இவ்விஷயங்களைத் தூஷித்திருக்கும் ஸ்ரீ கண்ட பாஷ்யம் முந்தியிருந்திருந்தால், இந்த அதிகரணத்தில் ஸ்ரீ கண்டாசார்யர் செய்திருக்கும் தூஷணத்துக்கு ஸ்ரீ பாஷ்யகாரர் ஸமாதாநம் எழுதாமலிருக்க மாட்டார் என்பது நிச்சயம். இதே அதிகரணத்தில் ஸ்ரீ பாஷ்யகாரர் 'யச்சோக்தம் கேஷாஞ்சித் த்ருஷ்டிவிரோத:' என்று மாயா வாதி வாக்யத்தை அநுவதித்துத் தூஷித்திருக்கவில்லையா? தவிரவும், இவ்விஷயங்கள், ப்ரத்யதிகரணங்களிலும் பரமத நிராகரணம் செய்வதே ஸ்வபாவ மென்னும்படி இருக்கும் ச்ருத ப்ரகாசிகையிலும் அநுவதித்துத் தூஷிக்கப்படாததனால், ஸ்ரீ கண்ட பாஷ்யம் ச்ருத ப்ரகாசிகைக்கும் பிந்தி உண்டானதென்றே தீர்மானிக்கப்படுகிறது. அத்துடன் 'விப்ரதிஷேதாச்ச' என்கிற ஸூத்ரத்திலிருக்கும் ஸ்ரீ கண்ட பாஷ்ய பங்க்திகளை ஸ்ரீ தொட்டையாசார்யர் பரிகர விஜயம் என்னும் க்ரந்தத்தில் 'அதைதத்' என்று ஆரம்பித்துத் தூஷித்திருப்பதால், ஸ்ரீ தொட்டையாசார்யர் காலத்திற்குக் கொஞ்ச நாள் முந்தி ஸ்ரீ கண்ட பாஷ்யம் உண்டாயிருக்கலாம்.

(தொடரும்.)

ஸ்ரீ:।

॥ ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: ॥

ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிக கவிதா விஷய விமர்சம்.

(ஸ்ரீ. உ.பே. வித்வான் த. வே. ஸ்ரீசைலாசார்யர், ந்ருஸிம்ஹபவநம், திருச்சி.)

நிகமாந்தநிகமார்த்தஸம்ப்ரதாயகவிகம் நிசாமநாதிஷ்டிதம் ।
கவிகவிகவல்லவக்ரம் கவிதாதத்வஜ்ஞாநாச்ரயே சரணம் ॥

ப்ராஜ்ஞாஜ்ஞாடவஸ்தாஹோவ்ருஷ்டிபதா: ஸஜ்ஜீரவாஸவஸ்திக
வ்யாஹாராரோஹதிர்த்யத்ருத்வஹாஸதோஷப்ரதாரஜகே வசஸ்திதா: ।
காவ்யாலங்க்ருதிநாடகாதிஷு தயா ஸாமோதுஷு நிஷ்ணாதிதா:
பத்யாஹத்யாந்த நிர்வ்யாஹ்ருதயா தீவ்யந்த வ்யாஸ்யாம் பத்யா: ॥

கதாச்ருதவஸ்திரோதந்தோர நிஷ்காதிவாதோரணீ
ரஹஸ்ய விதந்த: க்ருவாஜநதிலே நந்தாரஸ்ரிய: ।
விகஸ்வரவரோரந்த வ்ருணிவாம்பிதாஷ வ்ருதம்
தாரஹி காருணைவதம் வதயந்தம் வாராஹ்யம் ஸ்ரியை ॥

தேவ திர்யங் மநுஷ்ய ஸ்தாவர த்மகமான இவ்வுலகின்கண் ப்ரஹ்ம ஸ்ருஷ்டியின் அமைப்பை நாம் சற்று உற்றுப்பார்க்குமிடத்து, அது ப்ராயிகமாக ஸர்வமும் து:க்க மயமாகவும் அஜ்ஞாந மயமாகவும் பரிணாமத்தில் விரஸமாகவும் காணப்படுகிறதே ஒழிய ஒரு பதார்த்தமாவது ஸுகரூபமாகவும் ஜ்ஞாந மயமாகவும் பரிணாமத்தில் ஸரஸதரமாகவும் காணப்படவில்லை. கொஞ்சம் அவதாநத்துடன் பார்த்தால் இந்தத் தத்வம் எல்லோருக்கும் எளிதில் புலப்படும். உலகத்திலுள்ள இந்த அபேத்யமான அஜ்ஞாநாந்தகாரங்களைப் போக்குவதற்கு வாங்மயம் என்கிற ஸூர்யோதயமே ஸாமர்த்ய முள்ளது. இதைக் கணிசித்தே காவ்யாதர்சத்தில் 'இதமந்தம: க்ருத்ஸ்நம் ஜாயேத புவநத்ரயம் । யதி சப்தாஹ்வயம் ஜ்யோதிராஸம்ஸாரம் ந தீப்யதே ।' என்று தண்டியாசார்யன் சொன்னான்.

'காமம் கணசாலிஸ்ராஜெ விஸாஜெ தவாத் ஜொஅதெ ।
அக்ஷ்ஷ்ததா தஸ்ய ஸாஜேஷ்ண ஸஒக்ஷ்காஸ்தாயசுஹ்பிதா ।'

என்று காளிதாஸன் சொல்லியிருக்கிற வண்ணம் நுட்பமான விஷயங்களை அறிவிக்கிற சாஸ்த்ரமாகிற கண்ணால் நன்கு ஆராய்ந்து அறியப்பட்டிருக்கிற தர்மாதர்ம விஷயகமான ஜ்ஞாநமொன்றே மநுஷ்யனுக்குப் பசு முதலியவைகளை விட வைலக்ஷண்யா பாதகமாக இருக்கிறது. பாஹ்யங்களாக இருக்கிற சர்ம சக்ஷுஸ்ஸுக்களுக்கு ஸூக்ஷ்மமான தர்மாதர்ம ஜ்ஞாநோத்பாதகத்வ சக்தி இல்லாமையால், இவைகள் இருந்தும் இல்லாதவைகளே.

ஆகவே மநுஷ்யனுக்கு ஐஹிகாமுஷ்மிக ச்ரேயஸ்ஸுக்களெல்லாம் வாங்மயாதீநங்களாகப் பர்யவஸித்திருக்கின்றன. அந்த வாங்மயமானது வேதவேதாங்க ரூபமாகவும், ந்யாய மீமாம்ஸா வேதாந்த ரூபமாகவும், ஆயுர்வேத தநுர்வேத காந்தர்வ அர்த்த சாஸ்த்ர ரூபமாகவும், இதிஹாஸ புராண தர்ம சாஸ்த்ர ரூபமாகவும், காவ்ய நாடகாலங்கார சாஸ்த்ர மயமாகவும் பலவகைப்பட்டிருக்கிறது. ப்ரபுவைபோல் ஆஜ்ஞையிடுகிற வேதத்தைக் காட்டிலும், ஸுஹ்ருத்தைப்போல் ஹிதாஹிதங்களை எடுத்துக் காட்டுகிற புராணங்களைக் காட்டிலும், ப்ராணகாந்தையைப்போல் இங்கிதாகாரங்களாலேயே ரஸிகர்களை வசப்படுத்தி ஹிதாஹிதங்களையும் கர்த்தவ்யாகர்த்தவ்யங்களையும் நன்கு அறிவித்து நல்வழிப்படுத்தும் திறமை வாய்ந்திருப்பவைகளாக எல்லோராலும் அறியப்பட்டிருப்பதால், காவ்ய நாடகாலங்கார க்ரந்தங்களே ஸர்வோத்க்ருஷ்டங்கள். இவைகளே ஸாஹித்ய சப்தத்தால் உலகத்தில் வ்யவஹரிக்கப்படுகின்றன.

இப்படிப்பட்ட ஸரஸ நாடகாலங்கார க்ரந்தங்களுக்கு ஜீவாதுவாக இருப்பது கவிதை ஒன்றே. இது ஜந்மாந்தர ஸஞ்சித புண்ய பரிபாகமில்லாவிடில் ஒருவனையும் அணுகாது. இந்தக் கவிதை ஸ்வரஸமாகத் தானே வந்தால் ஸஹ்ருதய ஹ்ருதய ஸம்வநநமாக இருக்கும்; பலாத்கரித்து ஆகர்ஷிக்கப்பட்டால் விரஸமாகப் பலிக்கும். 'கவிதா வநிதா சைவ ஸ்வயமேவாகதா வரா। பலாதாக்ருஷ்யமாணா சேத் ஸரஸா விரஸா பவேத்॥' என்கிற அநுபவஸிகர்களுடைய வசநம் இதில் ப்ரமாணம். கணநம், ஸங்கீதம், கவிதை இவைகள் முன் ஜந்ம வாஸனையினால்தான் வரவேண்டும். ஸரஸ கவிதையானது ஆயிரத்தில் ஒருவருக்குத் தான் வரும் அவன் தான் கவி. 'கிமுதவயஃ கவயஃ கேவலம் கவயஸ்தே கேவலம் கவயஃ। கீடாஃ கீடாஃ கேவலம் கீடாஸ்தே கேவலம் கீடாஃ॥' என்று ரஸிகர்களின் வாசோயுக்தி. நீலகண்ட தீக்ஷிதரும், 'யஸ்ய ஸ்ஃ க்ருதிவிராஜதே த்ருதகவிதாமௌக்திகஃ பத்யைகாம்ருதம் தத்விதவதாவைஷணெ அதிதவ்யதே। தஸ்யைதஸ்ய ...

க்வயதா மந்தஸ்ஸீணமஹாதி வாக்ஷேவ கிம் ஸாஸகவிதா ஸாஜத்சுஹிச ஆலோசநம்' என்று நீர்வேத மண்டந்தார். மித ப்ரஜ்ஞர்கள் செய்யும் கவனம் வித்வத் விடம்பகமாகும். நீரஸமாக இருப்பதுடன் அது ச்ரவணதுர்ந்தமாயு மிருக்கும். இந்த விஷயத்தில், 'அதாவ்யாதவத்வெஜ்ஜே ஸதவமத ஸம்பார்ஷணஜெ ஸ்பஷ்டாஜவொஸவதிதஸாவொஜ்ஜுஸவொஃ। வஜ்ராகாத்ராதுமெ தவதவத்ஸாஜெஸவிஸ ஜஜெதச்சுஸ்பெ வதாக்ஷா ஹமவதி விவஷாவஸி கவிதெ' என்கிற வசநம் ஆதரிக்கத் தக்கது. 'வாதாபொகள வாமகதெ வா வாகவிநாம் வொகவ்யஜ்ஞாஷஸம்ஜெஸா ஜமத ஜவந்தி। மொகயமதாம் கொகிலமதாகவி ஸஜெஜெஷ காகாஸா மாதவாவ்யதி மஹிஷாணாம்॥' என்று க்ஷேமேந்த்ரனும் சொன்னான். ஸ்ரீவால்மீகி மஹர்ஷியானவர் மதுமய பணிதிகளுக்கு மார்க்கதர்சியாக ஏற்பட்டார். ஸ்ரீமத் ராமாயணமானது ஸகல கவிகுலங்களுக்கும் உபஜீவ்யமாக இருக்கிற ஸுபாஷித ரத்நங்களுக்கு அக்ஷயமான பாண்டாகாரம். ரமணீயமான வாக் ஸரணியில் அந்த வால்மீகியை அநுஸரித்தவன் கவி சிகாமணியான காளிதாஸன். ஸ்வபாவோக்தியிலும் உபமையிலும் இவனுக்கு அஸாதாரணமான பாண்டித்யம். 'நிமக்நாஸ்ய ந வா கஸ்ய காளிதாஸஸ்ய ஸூக்திஷு। ப்ரீதிர்மதுரஸாத்ராஸு மஞ்ஜரீஷ்விவ ஜாயதே' என்று பாணபட்டனும் இவனுடைய ஸூக்தி மஹிமையை வெளியிட்டான். ப்ராயிகமாக க்ரந்தங்கள் ச்ருங்கார ரஸத்தையும் கருண ரஸத்தையும் ப்ரதாநங்களாக ஆச்ரயித்திருப்பதால் அதற்கு அநுகுணமான வைதர்ப்பீ ரீதியும் கைசிகீவ்ருத்தியும் த்ராக்ஷா பாகமும் மது பாகமும் மாதுர்ய குணமும். அவனுடைய க்ரந்தங்களில் அதி ஸுந்தரமாக அமைந்திருக்கின்றன. எவ்விதத்தாலும் ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் காளிதாஸனை விட ஒருபடிமேலாக இருப்பதாகவே அபிஜ்ஞர்களின் கொள்கை. இந்த விஷயத்தை ஸவிஸ்தரமாக உபபாதிக்கிறேன்.

"கவயதி இதிகவிஃ। கவேஃ பாவஃ கவிதா ॥" கவிதையினால் ப்ரஸாதநீயம் காவ்யம். கவியின் கர்ம (அதாவது ஸரஸ சப்தார்த்த ஸங்கடநாத்மகமான) வ்யாபாரம் காவ்யமெனப்படும். கவிதை ப்ரதிபையைச் சார்ந்தது. 'ப்ரதிபா காரணம் தஸ்ய வ்யுத்பத்திஸ்து விபூஷணம்। அப்யாஸஸ்து உதிமெதஸ்ய த்ருஷ்டவெ' என்று அலங்கார சேகரத்தில் கேசவ மிச்ரன் அதன் உத்பத்திக்குக் காரணங்களைக் கூறினான். 'காவ்யம்

ஸவாதிசோகம் ஸ்ருதம் ஸவிசேஷகரம்' என்று ருத்ரடன் காவ்ய லக்ஷணம் சொன்னான். 'அதோஷௌ ஸகுணௌ ஸாலங்காரௌ சப்தார்த்தௌ காவ்யம்' என்று பாமஹாதிகளான ப்ராசீனாலங்காரிகர்களும், 'வாக்யம் ரஸாத்மகம் காவ்யம்' என்று ஸாஹித்ய தர்ப்பணத்தில் விச்வநாத கவிராஜனும், 'ரமணீயார்த்த ப்ரதிபாதக: சப்த: காவ்யம்' என்று ரஸகங்காதரத்தில் பண்டிதராஜனும், 'தததோஷௌ சப்தார்த்தௌ ஸகுணாவனலங்க்ருதீ புன: க்வாபி' என்று காவ்ய ப்ரகாசத்தில் மம்மட பட்டாசார்யனும் கூறியிருக்கிறார்கள். காவ்யத்தை ஆச்ரயித்தே குணங்களுக்கும் அலங்காரங்களுக்கும் விலாஸம் ப்ரசஸ்த மென்று அபிநவ குப்தாசார்யனுடைய அபிப்ராயம். கவிதையானது கவிகளின் பாண்டித்ய மென்கிற ஸுவர்ணத்திற்கு கர்ஷ ச்ரோபலமாக விளங்குகிறது.

இந்தக் காவ்யமானது த்ருச்யம் ச்ராவ்யம் என்று இரண்டு விதமாகப் பிரிவுற்றிருக்கிறது. த்ருச்ய பர்யாயமாக இருக்கிற ரூபகமானது, ப்ரதான ரூபகம் உபரூபகம் என்று இருவகையாகவும், ச்ராவ்ய காவ்யமானது கத்யமயம் பத்யமயம் உபயமயம் என்று மூவகையாகவும் பிரிவடைந்து, மொத்தம் ஐந்து விதமாக உலகில் நிலைபெற்றிருக்கிறது. இது மீண்டும் உத்தமோத்தமம், உத்தமம், மத்யமம், அதமம், அதமாதமம் என்று ஐந்து விதமாகப் பிரிவுபட்டிருக்கிறது. ரஸம் வ்யங்க்யமாக இருப்பது உத்தமோத்தம காவ்யம். 'இதமுத்தமமதிசயினி வ்யங்க்யே வாச்யாத் த்வனிர்புதை: கதித: । அதாத்ருசி குணீபூத வ்யங்க்யம் வ்யங்க்யே து மத்யமம் ।' என்று த்வநிலோசனகாரனான ஆனந்தவர்த்தனாசார்யன் உத்தமோத்தம காவ்ய லக்ஷணம் கூறினான். வஸ்த்வலங்கார மாத்ரம் வ்யங்க்யமாக இருந்தால் அது உத்தம காவ்யம். வ்யங்க்யார்த்தம் வாச்யார்த்தத்திற்கு உபஸ்காரகமாக இருந்தால் அது மத்யம காவ்யம். சப்தாலங்கார மாத்ரத்திற்கு ப்ராதான்ய மிருந்தால் அது அதம காவ்யம். சித்ர ப்ராதான்யம் எதிலிருக்குமோ அது அதமாதம காவ்யம். காவ்யமானது, சப்த ஸ்புரணத்தினாலும் அர்த்த ஸ்புரணத்தினாலும் உபயஸ்புரணங்களினாலும் ஸஹ்ருதய ஹ்ருதயாஹ்லாதகமாக ஆகிறது. காவ்ய நிர்மாணத்தில் ஸமர்த்தமான கவிதா சக்தியுள்ள மஹா கவிகள் கவிஸமயத்தை அநுஸரித்துத் தம்மால் செய்யப்படும் காவ்யத்தில் ரஸங்களையும் குணங்களையும் அலங்காரங்களையும் ரீதி, வ்ருத்தி, சய்யை, பாகம், இவைகளையும் ரஸாநுகுணமாக அமைக்கவேண்டும்.

விசிஷ்ய ப்ரக்ருதமநுஸராமி । ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகனுடைய திவ்ய ஸூக்திகள் எவ்விதத்தாலும் ரஸவத்தரங்கள். முதலில்

ஸ்வாமி அருளிச் செய்திருக்கிற ஹம்ஸ ஸந்தேச க்ரந்தத்தை விசாரிப்போம். இந்த க்ரந்தத்தில் ப்ரதிபாத்ய நாயகன் தீரோதாத்த லக்ஷணமுள்ள ஸ்ரீ ரகுநந்தனன். விப்ரலம்ப ச்ருங்காரம் ரஸம். வஸந்தவோ ப்ரக்யாதமாயுள்ளது. ரஸாவஸ்தாந ஸூசகங்கள் வ்ருத்திகளானபடியால் அதி ஸுகுமாரமான ச்ருங்கார ரஸாநுகுணமான கைசிகீ வ்ருத்தியை ஆச்ரயித்து வைதர்ப்பீ ரீதியில் இரண்டு ஆச்வாஸமுள்ள இந்த க்ரந்த ரத்னம் செய்தருளப் பட்டிருக்கிறது. ரமணீயார்த்த வர்ணந விஷயத்திலும் லலித சப்த ரசனையிலும் ரஸ ஸ்பூர்த்தியிலும் இந்த க்ரந்தத்தில் ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன், மேக ஸந்தேசத்தில் லலித லலிதமான ஸரணியில் செய்திருக்கிற காளிதாஸனைவிட உத்கர்ஷத்தை வஹிக்கிறார். இரண்டையும் ஒத்திட்டுப் பார்ப்போம். மேக ஸந்தேசத்தில் நாயகன் அப்ரஸித்தனான ஒரு யக்ஷன்; நாயிகையும் அவ்விதமே. இந்த ஹம்ஸ ஸந்தேசத்திலோ நாயகனும் நாயகியும் லோகோத்தரர்களான திவ்ய தம்பதிகள். அந்த மேக தூதத்தில் கதை கல்பிதமாயுள்ளது; இது ஸ்ரீமத் ராமாயண ரூபமான இதிஹாஸத்தில் அடங்கியது. ஸம்பாஷணத்திற்கும் ஸம்பாஷிதார்த்தங்களை அறிவதற்கும் ஸர்வதா ஸ்வரூப யோக்யதை இல்லாத அசேதநமான மேகம் அங்கு தூது விடுக்கப்பட்டிருக்கிறது. இந்த க்ரந்தத்திலோ வெனில்: மநுஷ்யர்களுடைய ஸல்லாபத்தின் அர்த்தங்களை உள்ளபடி அறியச் சக்தி இல்லாததாக இருந்தபோதிலும், மநுஷ்ய வ்யவஹார சப்த ச்ரவணத்திற்கும் தேசாந்தர கமநத்திற்கும் ஸ்வரூப யோக்யதையுள்ள அன்னப் பறவை என்கிற ஒரு சேதனன் தூது விடுக்கப்பட்டான். வ்யவஹாரத்தில் லோக தந்த்ர நிஷ்ணாதர்களான கவிகளால் ஜுகுப்ஸையையும் வ்ரீடையையும் உண்டுபண்ணுகிற சப்தங்களும் அச்லீலங்களும் ஸர்வதா வர்ஜிக்கத்தக்கவை. 'கவி குலபதி' என்று பெயர் பெற்ற காளிதாஸன் அதை மறந்தான். "ஜாதா ஸ்வாஹோ விபூதஜலதாரம் கோ விஹாதும் ஸஹேத: । கமீ ஹதாவத தாரஹோ:" "ப்ராயேண ஸ்யாத் ஸ்தநஸ்ரீ: ஸ்யாமதாவாப்ய ச: ஸவிசேஷவிஸ்தாரபாண்டு:" இவ்விதமான ப்ரயோகங்களே இவ்விஷயத்தில் ஸாக்ஷிகள். அவன் தன் க்ரந்தத்தில் மலைகளையும் நிர்மநுஷ்யமான காடுகளையும் அப்ரஸித்தமான நதிகளையும் வர்ணித்தான். ஆசார்யர்களோ வெனில்:

"ஹாரச்சே தீர்கவைஸ்வா ஸுவதிதமணீம் அந்யாநாஹுர் ..."

"கல்ப்ருஹாஸீ தடத்யஸ்யதே ஸஜியஸஞ்ஜாத ஸ்ரீ:" "கேஷ்த்ரம் யாயா: க்ஷவித தக்ஷிதம் தத்ர ஸதத்வ தாவந்ம் ।" "ஸ வஸ்ய வ..ஷோ தயஸ்யதே ஸதத்வகாம: ।" "வ்ருத்யாசேஷா விஷயலஸித ஹ்ருதயே ஸஹ்ருதயதா" "ஸாக்ஷே தீவ்ரே ஹ்யாயதபத ..."

R 5m 211, N11
N28.19.2
186790

[illegible] ॥ ”

என்று இவ்விதமாகத் திவ்ய க்ஷேத்ரங்களையும் பகவதபிவ்யக்தி ஸ்தலங்களையும் புண்ய நதிகளையும் வர்ணித்திருக்கிறார்கள்.

ரஸவிஷயத்தில் ஸ்வாமியின் கவிதை ஆச்சர்யகரியானது. வ்யாஸம் விரிவாய் விடும் என்கிற பயத்துடன் இரண்டொரு உதாஹரணங்களைக் காட்டிவிட்டு, மேலே போகிறேன். “ [illegible] ’ இந்த ச்லோகத்தில் ப்ரவாஸ விப்ரலம்ப ச்ருங்கார ரஸமானது வ்யங்க்ய மர்யாதையால் பாஸிக்கிறது. விப்ரலம்ப ச்ருங்காரமானது, “[illegible]”, என்று நான்காகப் பகுக்கப்பட்டிருக்கிறது. இவற்றுள் இந்த ஹம்ஸ ஸந்தேச காவ்யத்தில் ப்ரவாஸ விப்ரலம்பமே ப்ரதிபாத்யமாக இருக்கிறது. நாயக நாயிகைகளின் ஸம்போக ச்ருங்காரமானது ப்ரவாஸ விப்ரலம்பத்தால் பரிபோஷாதிசயத்தைப் பெற்றுப் பாவுகர்களுடைய லோகோத்தர சர்வண விஷயமாகிறது. ஜாநகீ ரூபமான ஆலம்பந விபாவத்தாலும் அந்த லோகோத்தர நாயிகையினுடைய ஸௌந்தர்ய பாவ ஹாவாதி ரூபங்களான உத்தீபந விபாவங்களாலும், மந்தஸ்மித ஸாகூத நிரீக்ஷண ஸவிலாஸ மந்தகமநாதி ரூபங்களான அநுபாவங்களாலும், ப்ரளய ரோமாஞ்ச ஸ்வேதங்கள் முதலிய ஸாத்விக பாவங்களாலும், க்லாநி சங்கா மதச்ரமாலஸ்யாதி ரூபங்களான ஸஞ்சாரி பாவங்களாலும் பரிபோஷிதமாக இருக்கிற ரதிரூபமான ஸ்தாயி பாவமே இங்கு ச்ருங்கார ரஸமாகப் பரிணமித்திருக்கிறது. வாச்யார்த்தத்தை விட வ்யங்க்யமான ரஸத்திற்கு ப்ராதாந்ய மிருப்பதால், இது உத்தமோத்தம காவ்ய மென்றும் த்வநி காவ்ய மென்றும் வ்யவஹரிக்கப்படுகிறது. அதிமதுர ச்ருங்கார ரஸாநுகுணமான வைதர்ப்பீ ரீதியும் அத்யந்த ஸுகுமாரமாயுள்ள அர்த்த ஸந்தர்ப்பத்தை ஆச்ரயித்திருக்கிற கைசிகீ வ்ருத்தியும் த்ராக்ஷா பாகமும் இதில் காவ்ய பாவநா பரிபக்வ புத்திகளுக்குப் பரமாநந்த ஜநகங்களாகப் ப்ரகாசிக்கின்றன. பதங்களுக்கு ஒன்றோடொன்று ஆநுகுண்ய மிருப்பதால் சய்யையும் ச்லாகநீயமாக இருக்கிறது. ரூபகம், [illegible] ஸ்வபாவோக்தி, அதிசயோக்தி, இந்த அலங்காரங்களுக்கும்,

உத்ப்ரேக்ஷாலங்காரத்திற்கும் அங்காங்கி பாவத்தினால் இந்த இடத்தில் ஸம்ஸ்ருஷ்டி ஏற்பட்டிருக்கின்றது. பந்த பாருஷ்யம் சப்த காடிந்யம் தீர்க்க ஸமாஸம் இவைகளில்லாமையால் சப்த ரசநா விசேஷத்தை ஆச்ரயித்திருக்கிற ரீதியானது வைதர்ப்பீ. ஸுகுமாரமான அர்த்த ஸந்தர்ப்பத்தை ஆச்ரயித்திருப்பதால் வ்ருத்தி கைசிகீ.

“ [illegible] ॥ ”

இந்த ச்லோகத்தில் ஸ்வவிஷயகமான ஜாநகியின் நிரந்தர சிந்தாரூப ப்ரேம ப்ரவாஹ ஸந்ததியில் யோக ஸமாதியானது கவிகுல பதியினால் காட்டப்பட்டிருக்கிறது. ஸர்வ தந்த்ர ஸ்வதந்த்ரர் என்கிற ப்ரஸித்திக்கு அநுகுணமாக யோக சாஸ்த்ரத்தில் தமக்கு இருக்கிற அஸாதாரணமான பாண்டித்ய ப்ரகர்ஷத்தைக் கவி நன்கு காண்பித்திருக்கிறார். பூர்வார்த்தத்தால் யோகத்தின் ப்ரத்யாஹாராந்தமாயுள்ள பஹிரங்க ஸாதநங்களால் நிஷ்பாத்யமான தாரணையை உபந்யஸித்து, உத்தரார்த்தத்தால் த்யாந ஸமாதிகளின் ஸ்வரூபம் நன்கு நிரூபிக்கப்பட்டிருக்கிறது. மேலும், யோகசாஸ்த்ர ப்ரஸித்தமான க்ஷிப்தம் மூடம் விக்ஷிப்தம் ஏகாக்ரம் என நான்கு சித்த பூமிகளுக்குள் நான்காவதான ஏகாக்ர மென்கிற சித்த பூமியில் ஸித்திக்கிற ஸம்ப்ரஜ்ஞாத ஸமாதவஸ்தையைப் பூர்வார்த்தத்தால் நிரூபித்து, நிருத்தம் என்கிற சித்தபூமியில் ஸித்திக்கிற நிர்பீஜஸமாதி என்கிற அஸம்ப்ரஜ்ஞாத ஸமாதியின் ஸ்வரூபம் உத்தரார்த்தத்தால் வெளியிடப்பட்டிருக்கிறது. ‘[illegible]’ சப்தத்தால் ‘[illegible]’ என்கிற ஹிரண்யகர்ப்ப ப்ரவர்த்திதமான யோக சாஸ்த்ர ப்ரக்ரியை ப்ரத்யபிஜ்ஞாபிதமாயிற்று. நிர்வேத ஸ்தாயிபாவகமான சாந்த ரஸமானது இங்கு அபிவ்யக்தமாகிறது. ரஸாநுகுணமான ஸுகுமாரார்த்த ஸந்தர்ப்பமுள்ள கைசிகீ வ்ருத்தியும் பந்த பாருஷ்யத்தையும் சப்தகாடிந்யத்தையும் தீர்க்க ஸமாஸத்தையும் ஸஹியாததான வைதர்ப்பீ ரீதியும் த்ராக்ஷாபாகமும் தரங்கிதங்களாக ப்ரகாசிக்கின்றன. முத்ராலங்காரமும் ஸ்வபாவோக்தியும் ஸஹ்ருதய ஹ்ருதயசமத்கார பாதகங்களாக இருக்கின்றன. இதில் ப்ரஸாதமென்கிற அர்த்த குணமும் ஜாகரூகமா

வர்ணனது. ஊனோபகர்ஷக தோஷமும் ஸம்ஷேவி இல்லை. 'ஆதிவராஹ...' [illegible] என்கிற வசனத்தின்படி 'வருதத்வ...' [illegible] ஸ்வாமியின் காவ்ய ஸ்ரீ ஸூக்திகளில் [illegible] இருக்கிறது.

(தொடரும்.)

ஸ்ரீ

புஸ்தக விமர்சம்.

(1)

கோபால விம்சதி.

[ஸ்ரீ உப, வித்வாந். எ. வி. கோபாலாசார்யர், எம். ஏ., பி. எல்.
'வாணி விலாஸ' ப்ரஸ், ஸ்ரீரங்கம். விலை 0-8-0.]

பாலென்கோ ? நான்குவேதப் பயனென்கோ ? சமய நீதி
நூலென்கோ ? நடங்கு கேள்வி யிசையென்கோ ? இவற்றுள் நல்ல
மேலென்கோ ? வினையின் மிக்க பயனென்கோ ? கண்ணனென்கோ ?
மாலென்கோ ? மாயனென்கோ ? வானவராதியையே ! [திரு. III. 4-6]

என்றன்றோ ஆழ்வாரது அநுபவம் நிற்கிறது? 'ஸர்வ வேதாந்தங்களாலும், ஸர்வ வேதார்த்த நிர்ணயமாய் ஹேது மத்தாயிருந்த ப்ரம்ம ஸூத்ர பதங்களாலும், பரம புருஷார்த்ததயா ப்ரதிபாத்யமாக னென்று' சொல்லுவதா? போக்ய பதார்த்தங்கள் எல்லாவற்றிலும் மேற்பட்ட போக்யமென்று சொல்லுவதா? ஸகல புண்ய பலமென்று சொல்லுவதா? ஆச்ரித ஸுலப னென்று சொல்லுவதா? ஆச்ரித வத்ஸல னென்று சொல்லுவதா? ஆச்சர்ய பூதனென்று சொல்லுவதா? என்ன வென்றுதான் சொல்லி கண்ணனது பெருமையை நாம் பூர்த்தியாக அநுபவிக்கக் கூடும்? ஸ்ரீ பகவதவதாரங்களில் க்ருஷ்ணாவதாரம் உத்க்ருஷ்டமான தென்று பல காரணங்களைக் கொண்டு சொல்லலாம். [illegible] என்றவாறு ஸர்வேச்வரன் இவ்வவதாரத்தில் இங்கு வந்து ஸர்வ ஸுலபனுப் தமது திவ்ய செஷ்டிதங்களால் சேதநர்களை யெல்லாம் மகிழ்விக்கச் செய்தான். இவனுடைய சேஷ்டிதங்களின் கதனத்தினால் ஸ்ரீ வியாஸரும் முன் பெறாத சாந்தியைப் பெற்றார். ஸ்ரீ க்ருஷ்ணனுடைய

திவ்யமான சேஷ்டிதங்களைப் பற்றி எவ்வளவு காலம் எவ்வளவு பிரகாரங்கக் கேட்டாலும் அதனால் ஏற்படும் ஆனந்தத்திற்கு ஒரு அவதி யென்பது இருப்பதில்லை. இந்த க்ருஷ்ணாவதாரத்தில் ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன் ஒவ்வோர் ஸமயத்தில் ஒவ்வொரு விதமாகத் தமது ப்ரேமையை வெளியிட்டிருக்கிறார். யாதவாப்யுதய மென்னும் காவ்யத்தில் ஸ்ரீ ஆசார்யன் இவ்வவதார விசேஷங்களை அநுபவித்திருக்கிறார். அத்துடன் ஸ்தோத்ர ரூபமான கோபால விம்சதி யென்னும் ஸூக்தியை அருளிச் செய்திருக்கிறார். ஸ்ரீ தேசிகனுடைய ஸூக்திகளைப்பற்றி இங்கு விசேஷித்து எழுதவேண்டியது அதிகப்படியாகும். கோபால விம்சதி யென்ற 20 ச்லோகங்க ளடங்கிய ஸ்தோத்ரம் வெகு ஸரளமாகவும், அதிமதுரமாகவும், அநுஸந்திக்கும் பொழுதே விசேஷ போக்யதையை யுண்டுபண்ணுவதாகவுமிருக்கிறது. ஸ்ரீ தேசிகன் பல திவ்ய தேசத்து எம்பெருமான்களிடமும் ஈடுபட்டு அதன் பரீவாஹமாக ஸாதித்துள்ள ஸ்தோத்ர ஜாலங்களுள் ஒன்றுகிய இந்த கோபால விம்சதியை அநுஸந்திக்காத நம் ஸம்பிரதாயஸ்தர்கள் அநேகமாக இருக்கமாட்டார்களென்றே சொல்லலாம். ஸ்ரீ கிருஷ்ணனிடம் எப்படி பல மஹான்களையும் ஆகர்ஷிக்கும்சக்தி யிருந்திருக்கிறதோ அப்படி இந்த ஸ்தோத்திரனிடமும் ஒரு ஆகர்ஷண சக்தி யிருக்கிறது. இந்த ஸ்தோத்திரத்தில் ஆழ்ந்து கடக்கும் அர்த்த விசேஷங்களை அநுபவ பூர்வகமாக ஒரு சமஸ்க்ருத வ்யாக்யானம்மூலம் வெளியிடும் பாக்யம் வித்வான் ஸ்ரீ உப எ. வி. கோபாலாச்சார்யர் ஸ்வாமிக்கு லபித்திருக்கிறது. ஸ்ரீ உப கோபாலாசார்யஸ்வாமியைப் பற்றி நிபிலாபிமானிகளுக்குப் புதிதாக ஒன்றும் சொல்லவேண்டிய அவசிய மில்லை. நமது ஸம்பிரதாயத்திற்கே அந்த ஸ்வாமி ஒரு நிதியாக விருக்கிறார். அவரது ஆழ்ந்த ஸித்தாந்த ஜ்ஞானமும், ஆசார்ய திவ்ய ஸூக்திகளில் அவருக்கு ஏற்பட்டுள்ள அநுபவமும் அத்யந்தம் பஹுமானிக்கக்கூடியவை. ஸ்ரீ தேசிகன் திவ்ய ஸூக்திகளைப் பூர்ணமாக அப்யஸித்து அவற்றிலுள்ள விசேஷார்த்தங்களை அடிக்கடி சிந்தித்து ஸந்தோஷித்து வருபவர். அத்துடனில்லாது தமது அநுபவ விசேஷங்களைப் பிறர் அறியும் வண்ணமும் தமது ஜ்ஞானத்திற்குத் தகுந்த ப்ரயோஜன முண்டுபண்ணி வருகிறார். அந்த ஸ்வாமி இப்பொழுது ஸ்ரீ தேசிகன் ஸ்தோத்ர பாடங்களுக்கு வ்யாக்யானஞ் செய்ய முன் வந்திருப்பது மிகவும் பொருத்தமாக விருக்கின்றது. சப்தார்த்தங்களையும், வ்யங்க்யார்த்தங்களையும் விஸ்தரேண எடுத்துச் சொல்லும் ஸாமர்த்தியம் இவரிடம் பூர்ணமாகப் பொருந்தியிருக்கிறது. இந்த கோபால விம்சதி வ்யாக்யானத்தில் இந்த ஸ்வாமியின் பகவத் குணாநுபவமும் ஸாமர்த்தியமும் நன்கு வெளியாகின்றன. இதரர்களுக்கு ஸுலபத்தில் ஸ்புரிக்கக்கூடாத பல அர்த்த விசேஷங்கள் பூர்வாசார்ய ஸூக்திகளைக்கொண்டு இந்த வ்யாக்யானத்தில் ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கின்றன. உபோத்காதத்தில் அவதார விசேஷமும், அவ்வவதாரத்தில் ரிஷிகள் முதலான பல மஹான்கள் ஈடுபட்டிருப்பதும் அழகாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. வியாஸர் சுகர், பராசர பட்டர் ஆகியோரும், நிர்குண ப்ரஹ்மவாதிகளான ஸ்ரீ சங்கராசார்யர், மதுஸூதன ஸரஸ்வதி ஆகியோரும், சுத்த சைவ

ரான லீலாசுகரும் க்ருஷ்ணனால் ஆகர்ஷிக்கப்பட்டு அவனிடத்தில் ஈடுபட்டு தத் பரி வாஹமாக வெளியிட்டுள்ள மதுரமொழிகள் இங்கு ஒருங்கு சேர்த்துக் காட்டப்பட்டிருக்கின்றன. ப்ருந்தாவனத்தில் ஸ்ரீ க்ருஷ்ணன் ரமித்ததை முக்யமாகத் திருவுள்ளம்பற்றி இந்த ஸ்தோத்திரத்தில் ப்ருந்தாவன சரித்திரத்தை ஸ்ரீ தேசிகன் அநுபவித்துள்ள தாத்பர்யம் நன்கு எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. உபநிஷத்தடவிக்கும் இந்த ப்ருந்தாவனத்திற்கும் காட்டப்பட்டுள்ள ஸாதிருச்யம் மிகப் பொருத்தமாக விருக்கிறது. ஸ்ரீ க்ருஷ்ணன் மதுரையில் அவதரித்தாலும் ஆரண்யகனுவே யிருந்து அங்கு ஸௌலப்யத்தை வஹித்திருக்கிறு னென்று ஸ்தோத்திர வ்யாக்யான ஆரம்பத்தில் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. உபோத்காதத்தில் வெளியாகியுள்ள விசேஷார்த்தங்களைத் தவிர ச்லோக வ்யாக்யாநா வஸரத்திலும் ரஸமாகவும் விஸ்தாரமாகவும் அபூர்வ விஷயங்கள் போதிக்கப்படுகின்றன. வ்யாக்யாந வாக்ய சைலியும் அழகாக விருக்கிறது. ஸம்ஸ்க்ருத பாஷை ஒளி குன்றி வரும் இக்காலத்தில் இவ்விதம் அழகான ஸம்ஸ்க்ருத வ்யாக்யானம் வெளி வருவது நமக்கு மிகுந்த ஆஹ்லாதத்தை யுண்டு பண்ணக் கூடியதாகும். ஸ்ரீ உப. கோபாலாசார்யர் ஸ்வாமி இந்த வ்யாக்யாந மூலமாகவும் இதர ஸ்தோத்ர வ்யாக்யாநங்கள் மூலமாகவும் நமது ஸித்தாந்தத்திற்கும் ஸம்ப்ரதாயத்திற்கும் பரமோபகாரத்தைச் செய்திருக்கிறு ரென்பதில் ஸந்தேஹமில்லை.

யே ச வேத விதோ விப்ரா: யே சாத்யாத்ம விதோ ஜநா: |
தே வதந்தி மஹாத்மாநம் க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம் ||

என்றபடி ஆத்யந்தரஹிதனும், எல்லோருக்கும் எல்லாவித பலத்தைத் தருபவனும், பரம ப்ராப்யனுமுள்ள ருக்மிணி வல்லபனை விஷயமாகவுடைய இந்த ஸ்தோத்ரமும் விசேஷார்த்தத்தை ஸம்யக் போதிக்கும் ஸ்ரீ கோபாலாசார்ய ஸ்வாமியின் வ்யாக்யானமும் ஸர்வாதிகாரிகளுக்கும் பரம போக்யமாயும் ஹிதமாயுமிருக்குமென்பது அடியேனுடைய நம்பிக்கை.

குரிச்சி. சேஷாத்ரியாசார்யன்,

திருவல்லிக்கேணி.

---

(2)

ஸ்ரீ:

சப்தார்த்த சிந்தாமணி.

இப்பெயர் பூண்ட ஸம்ஸ்க்ருத நிகண்டு ஒன்றை நாம் வரப்பெற்றோம். இது திருவல்லிக்கேணி ஹநுமந்தராயன் கோயிலில் வஸித்து வரும் ஸ்ரீ. உப. வித்வாந் தட்டை ஸ்ரீ நிவாஸாசார்யரால் இயற்றப்பெற்றிருக்கிறது. ப்ரஸித்தங்களான காவ்ய

நாடகாதிகளில் மஹாகவிகளால் ப்ரயோகம் செய்யப்பட்டுள்ள பதங்களுள் ஏற்றேறக் குறைய பன்னீராயிரம் ஸங்க்யை கொண்ட பதங்களுக்கு எளிதாயும் சுத்தமாயுமுள்ள தமிழ் நடையில் இதில் அர்த்தம் எழுதப்பட்டிருக்கின்றது. பாஷாந்தர பாடசாலைகளில் ஸம்ஸ்க்ருதம் அப்யஸிக்கும் வித்யார்த்திகளுக்கு உபயோகப்படுமாறு, ஸகல ஸம்ஸ்க்ருத பதங்களும் நாகர லிபியில் அச்சுப் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன ; அந்தப் பதங்களுடைய லிங்கங்களும் நாகர லிபியிலேயே நன்றாக ஸூசிப்பிக்கப்பட்டிருக்கின்றன. பாலர்கள் ச்ரமமின்றிக்கு உபயோகிக்கும்படி ஒரு சிறிய புஸ்தகமாக இது அமைந்திருப்பதும் இதன் குணங்களுள் ஒன்றென்றே நாம் எண்ணுகிறோம்.

இதில் எடுக்கப்பட்டிருக்கும் பதங்களுள் ஸம்ஸ்க்ருத தாது ஒன்று கூட காணப்படவில்லை. ஒருகால், ப்ரத்யயங்கள் சேராமல் கேவல தாதுக்களை மாத்ரம் எழுதுவதில் லாபமில்லை யென்றும், ப்ரத்யயங்களைச் சேர்த்து எழுதும் பக்ஷத்தில் அவ்யவஸ்தை ஸம்பவிக்கு மென்றும் இத்யாதியான எண்ணங்களால் அவைகள் விலக்கப்பட்டிருக்கவும் இருந்தபோதிலும், அவைகளைச் சேர்த்திருந்தால் புஸ்தகத்துக்கு ஸாமக்ர்யம் ஏற்படுவதுடன், தாத்வர்த்தங்களைத் தெரிந்துகொள்ள விருப்பமுள்ளவர்களுக்கு உபகாரமாக இருந்திருக்கும் என்றே நமக்குத் தோன்றுகிறது.

இதில் மற்றுமொரு விசேஷத்தை நாம் பார்க்கிறோம். "கடூர:—குதிரை, கடி:—குடம்" என்று சில அபூர்வ சப்தங்கள் இதில் தென்படுகின்றன. இவை நிகண்டுக்களில் படிக்கப்படாமல் இருக்கும் பக்ஷத்தில் இவ்விடத்தில் உதாஹரிக்கப்பட்டிருக்க மாட்டா என்னும் நம்பிக்கை நமக்கு உண்டு. ஆனாலும் இவை எவ்விடத்திலாவது கவிகளால் ப்ரயோகிக்கப்பட்டிருக்கின்றனவா என்பதில் நமக்கு நிச்சயபுத்தி ஜனிக்கவில்லை. இந்தப் பதங்கள் எல்லாம் அபபுத்ரங்கள் போலவும் ஸ்வரூபத்தால் ப்ராக்ருத பதங்கள் போலவுமே தோன்றுகின்றன. இவை எக்காலத்தில் யாரால் ஸம்ஸ்க்ருத பாஷையில் சேர்க்கப்பட்டன வென்பதைத் தெரிந்துகொள்வதில் நாம் ஆவலுள்ளவர்களாக இருக்கிறோம்.

இந்தப் புஸ்தகத்தின் விலை ரூ. 2—0—0. இதை அபேக்ஷிப்பவர்கள் 'ஸ்ரீ வித்வாந் டி. ஸ்ரீநிவாஸாசார்யர், 2-ஹநுமந்தராயன் கோயில் தெரு, திருவல்லிக்கேணி' என்னும் விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீ:

கடிதங்கள்.

ஸ்ரீ வானமாமலை மடத்தின் வித்வத் ஸபை.

ஸ்ரீ. வே. தீ. ஸம்பாதகருக்கு:—

ஸ்ரீவானமாமலை ஸ்வாமி இப்பொழுது ஹைதராபாக்கத்தில் எழுந்தருளியிருக்கிறார் என்று எல்லாருக்கும் தெரிந்த விஷயம். அவ்விடத்தில் ஸ்ரீ ஸீதாராம பாக்கத்தில் இந்த ஸம்வத்ஸரத்திய வித்வத் ஸதஸ்ஸானது, ஸ்ரீமணவாள மாமுனிகள் முதல் உத்ஸவ தினம் ஆரம்பிக்கப்பட்டுப் பத்து தினங்கள் நடந்தேறிற்று. மைஸூர், திருப்பதி, அநேக ஆந்த்ர பட்டணங்கள், இவைகளிலிருந்து ப்ரஸித்த வித்வான்கள் அநேகர் வந்திருந்தார்கள். அத்வைதவிசிஷ்டாத் வைத விஷயமாகவும் பகவத் விஷயமாகவும் பல உபந்யாஸங்கள் செய்யப்பட்டன. ஒவ்வொரு தினத்திலும் அன்றன்றைக்கு நடந்த உபந்யாஸத்தின் ஸங்க்ரஹம், ஹிந்தி பாஷையிலும் தெலுங்கு பாஷையிலும் ஸ்ரீ ஸ்வாமியால் தெளிவாக அநுக்ரஹிக்கப்பட்டது. உபந்யாஸ விஷயங்களும், உபந்யாஸங்களைச் செய்த வித்வான்களின் திருநாமங்களும் பின் வருமாறு:—ஸ்ரீ. கந்தாடை சடகோபாசார்ய ஸ்வாமி-ஸ்ரீ பாஷ்யத்தின் தாத்பர்யம்; ஸ்ரீ வானமாமலை அப்பங்கார்-ஆநந்தமயாதிகரணம்; ஸ்ரீ புரிசை க்ருஷ்ணமாசார்யரும் ஸ்ரீ வானமாமலை அப்பங்காரும்-அத்வைத விஷய வாதம்; ஸ்ரீ சோங்குளம் வரதாசார்யர்-அந்தராதிகரணம்; ஸ்ரீ சிரோமணி சடகோபாசார்யர்-வாக்யாந்வயாதிகரணம்; ஸ்ரீ மைஸூர் ராமாநுஜாசார்யர்-ஸாம்பராயாதிகரணம்; ஸ்ரீ மைஸூர் ஐயமாசார்யர்-ந்யாய பரிஷ்காரம்; ஸ்ரீ வானமாமலை ஐயங்கார்-பகவத் விஷயம் 'நீர்ப்பாரை'; ஸ்ரீமத் பரம ஹம்ஸேத்யாதி ஸ்வாமி-ஸ்ரீமணவாள மாமுனிகள் விஷயம்.

கடைசி தினத்தில் வித்வான்களுக்கு ஸம்மானம் கொடுக்கப்பட்டது.

ஸ்ரீவானமாமலை மடம்,
ஹைதராபாக்கம்,
ஐப்பசி 12௳

வித்வான் சடகோபாசார்யர்,
சிரோமணி.

[அப்ரதீக்ஷிதங்களான சில விக்நங்களால் இந்த ஸ்ரீ முகத்தின் ப்ரகாசநம் கொஞ்சம் விளம்பிக்கும்படி நேர்ந்து விட்டது. அதை ஸ்ரீஸ்வாமி க்ருபையுடன் க்ஷமித்தருள வேணும்.
ஸ்ரீ வே. தீ. ஸம்பாதகன்.]

॥ ஸ்ரீ: ॥

॥ [illegible] ॥

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

பத்ராதிபரின் குறிப்புகள்.

லாலா லஜபத ராயின் மரணம்.

'பஞ்சாப்' என்னும் பாஞ்சால தேசத்தில் சற்றேறக்குறைய முப்பது வருஷ காலமாக இந்தியர்களின் அபிவ்ருத்தியை உத்தேசித்து பூர்ண ஊக்கத்துடன் உழைத்து வந்த லாலா லஜபத ராய் என்னும் ஒரு மஹான் நவம்பர் மாஸம் 2௳ சனிக்கிழமை காலையில் காலம் சென்று விட்டார் என்பதைக் கேட்டு நாம் மிகவும் துக்கிக்கிறோம். சிறந்த நற்குணங்களால் நிறைந்துள்ள ஒருவர் இறந்து விட்டால், அது யாருக்குத்தான் துக்கத்தை ஜநிப்பிக்க மாட்டாது? லாலா லஜபத ராய் அவர்களிடம் பல நற்குணங்கள் இருந்தன வென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். அந்த நற்குணங்களுடன் கூட கூர்மையான புத்தியும் வாக்மித் தன்மையும் இன்னும் இவை போன்ற மற்றைத் திறமைகளும் அவரிடம் ஏராளமாய் இருந்துவந்தன. இந்தத் திறமை முழுவதையும் பரோபகாரத்திற்காகவே அவர் உபயோகித்து வந்தார்; அது காரணமாக அவரிடத்தில் மஹா ஜனங்க ளெல்லாரும் ஹார்த்தமான ப்ரீதியைச் செய்தார்கள். வறுமையால் வருந்தும் ஏழை ஜனங்களுக்குத் தம்மால் இயன்ற மட்டும் அர்த்தத்தால் உதவுவதும், பிறர் ஹிம்ஸையால் வருந்தும் ஜனங்களின் கஷ்டத்தை யதா சக்தி நிவ்ருத்திப்பதும், பர ஹிம்ஸையில் ப்ரவ்ருத்திக்கும் துஷ்டர்களைக் கண்டிப்பதும் இவை முதலான ஸத்கார்யங்களையே அவர் தமது முக்ய புருஷார்த்தமாகக் கொண்டிருந்தார்.

இப்பொழுது நமது ராஜ்யத்தைப் பரிபாலநம் செய்து வரும் பாச்சாத்ய ராஜாங்கம் சில அம்சங்களில் ஜநங்களுக்கு ஸம்ரக்ஷணத்தைச் செய்து வருகையிலும், மற்றும் சில முக்ய அம்சங்களில் ப்ரஜைகளுக்குப் பீடாகரமாகவே இருக்கின்றது என்று நம்பி இருந்தவர்களுக்குள் அவர் ஒருவர். அந்தப் பீடாகரங்களான அம்சங்களைச் சீர் திருத்தம் செய்வதற்காக ப்ரபலமான பல முயற்சிகளை அவர் செய்து வந்தார். ஒரு ஸமயத்தில் அம்முயற்சிகள் சில ராஜ புருஷர்களுக்கு அப்ரீதியை ஜநிப்பித்தபடியால், அவர் அது காரணமாகக் காராக்ருஹத்திற்குப் போகும்படி ஸம்பவித்தது. எனினும், அதனால் அவர் கொஞ்சமேனும் மனத்தளர்ச்சி அடையவில்லை. தாம் செய்யும் கார்யம் ஸாதுவான கார்யமென்றும், தம்மை அதற்காகச் சிக்ஷிப்பவர்கள் செய்யும் கார்யம் அஸாதுவான கார்யமென்றும் அவர் த்ருடமாக நம்பியிருந்தபடியால், அவருடைய மநோ தைர்யம் அவரை விட்டு விலகாமலே இருந்தது. காராக்ருஹத்திலிருந்து விடுவிக்கப்பட்டு வெளிவந்த பிறகும், அவர் யதாபூர்வம் தமது நோக்கத்தையே கைக்கொண்டவராய், மஹா ஜநங்களுக்கு ஜ்ஞாந வ்ருத்தியைச் செய்வதிலும் ராஜாங்கத்தைச் சீர்திருத்துவதற்குத் தேவையான உபாயங்களைத் தேடுவதிலுமே தமது காலம் முழுவதையும் கழித்து வந்தார். நமது மத விஷயமாகவும் ஆசாரவிஷயமாகவும் அநேக சீர் திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென்பதும் அவருடைய முக்ய நோக்கங்களுள் ஒன்றாக இருந்தது. ஆனால், அவை ஒன்றும், இப்பொழுது நடைபெற்று வரும் ராஜாங்கம் சீர்திருத்தமடையாத வரையில் த்ருப்திகரமாக ஸாதிக்கப்பட மாட்டாவென்று அவர் உணர்ந்திருந்தபடியால், அவை போன்ற ப்ரயத்நங்களை அவர் பலமாகச் செய்யாமலே இருந்தார். டம்பம் தர்ப்பம் க்ரோதம் முதலிய துர்க்குணங்கள் சிறிதும் இல்லாமல் ஆர்ஜவம் அஹிம்ஸை தயை முதலிய உத்தம குணம் நிறைந்துள்ள அந்த மஹான் இன்னும் கொஞ்ச காலம் இந்த விபூதியில் இராமல் மறைந்து விட்டாரே என்பதை நினைக்க நமக்குச் சோகம் உண்டாகிறது.

இவர் மரணமடைந்த விஷயமாக நமது சோகத்தை அதிகப்படுத்த வேறு ஒரு காரணமும் உண்டு. இவருக்கு மரணம் நேர்வதற்குப் பத்து தினங்கள் முன்பு, இவர், பல ஆயிரக்கணக்கான மஹா ஜநங்களுடன் கூடப் பெரியதொரு கூட்டத்தில் பொது விஷயங்களைப் பற்றிச் சில வ்யவஹாரங்களை நடத்தி வருகையில், அங்கிருந்த போலிஸ்காரர்களுள் சிலர் அவர் மீது நிஷ்காரணமாக ஆக்ரோசம் கொண்டு அவரைத் தடியால் அடித்தார்களென்றும், அந்த அடிகளால் அவருக்குத் தேஹத்தில் நோய் உண்டாகி, ஏற்கனவே அவரிடத்தில் இருந்த ஒரு வ்யாதி பலப்பட்டு, அதனால் அவருக்கு மரணம் நேர்ந்ததென்றும் நாம் சில ப்ராமாணிக ஜநங்களின் வார்த்தையிலிருந்து

அறிகிறோம். அடிபட்ட மறு தினமே லாலா அவர்களே இம்மாதிரி தம்மைப் போலீஸ்காரர்கள் நிஷ்காரணமாக அடித்தார்களென்றும், அதனால் தமக்கு நோய் உண்டாகி வருத்துகிறதென்றும் பத்ரிகை வாயிலாக மஹா ஜநங்களுக்குத் தெரிவித்திருக்கிறார். அந்த நோய் இரண்டு மூன்று தினங்களுக்கெல்லாம் சமநம் அடைந்தது போல் இருந்தும், அதற்கு ஸமீப காலத்திலேயே திடீரென்று அவருக்கு மரணம் நேர்ந்ததைப் பார்க்கும் பொழுது, ஒருக்கால் அந்தப் போலிஸ்காரரால் கொடுக்கப்பட்ட அடியே இந்த மரணத்திற்கு ஒருவாறு காரணமாகி இருக்குமோவென்று ஒரு அதிசங்கை நிஷ்பக்ஷபாதர்களான எல்லாருடைய மநஸ்ஸிலும் ஜநிக்கின்றது. வயஸ்ஸில் வ்ருத்தராகவும், உத்தம குணங்களால் நிறைந்தவராகவும், மஹா ஜநங்களெல்லாராலும் மஹானென்று கொண்டாடப்படுபவருமான இந்த ஸாத்விகர், ஒரு ராஜ புருஷனுடைய ஆக்ரோசத்துக்குப் பாத்ரமாகி மரணமடைந்தார் என்பது மிகவும் சோசநீயமே.

* * *

ஸ்த்ரீகளின் தூஷணம்.

ஸ்ரீ. உப. வித்வான் நட்டை ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியால் எழுதப்பட்டிருந்த "ஸ்த்ரீகளுடைய ஸ்வாதந்த்ர்யம்" என்னும் விஷயத்தைப் பற்றிய வ்யாஸமொன்று சென்ற ஸஞ்சிகையில் ப்ரகாசிக்கப்பட்டிருந்ததை நமது ஸஹ்ருதயர்களெல்லாரும் பார்த்திருக்கலாம். ஸ்த்ரீ ஜாதியைப்பற்றி அதில் அவரால் செய்யப்பட்டிருக்கும் தூஷணங்களை நாம் ஆமோதிக்கிறோமில்லையென்பதை அந்த ஸஞ்சிகையிலேயே நாம் ஸூசிப்பித்திருந்தோம். அப்படி ஆமோதிக்காமல் இருப்பதற்குக் காரணம் யாது என்பதை இப்பொழுது வெளியிடுகிறோம்.

ஸ்ரீ. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி சொல்வது தத்வ ஸ்திதி அன்று என்பதே அதற்கு முக்ய காரணம். ப்ரபஞ்சத்தில் ஸ்த்ரீகள் எல்லாரும் அவர் சொல்வது போல் துஷ்டர்களல்லர். பூர்வ காலத்தில் அநஸூயை அருந்ததி போன்ற ஆயிரக்கணக்கான ஸாத்விகள் இருந்தார்கள் என்று நமது இதிஹாஸ புராணங்கள் சொல்லுகின்றன. இக்காலத்திலும் மிகச் சிறந்த குணங்களால் நிறைந்துள்ள உத்தம ஸ்த்ரீகள் மிகப் பலர் இருக்கிறார்கள் என்று நமது அநுபவம் நமக்குத் தெரிவிக்கின்றது. வஸ்து ஸ்திதி இவ்விதம் இருக்கையில் அவர் சொல்வது எப்படி ந்யாயத்திற்கு ஒத்ததாகும்? தாம் செய்யும் தூஷணத்திற்கு ஆதாரமாகச் சில கவிகளின் வாக்யங்களை அவர் கூறுகின்றார். கவிகளின் வாக்யங்கள் ஸர்வ ப்ரகாரத்தாலும் ப்ரமாணமாகுமோ? அந்த வாக்யங்கள் யாரால், எந்த ப்ரகரணத்தில், என்ன தாத்

பர்யத்துடன் சொல்லப்படுகின்றன வென்பதைப் பார்த்தே அவைகளின் ப்ராமாண்யாப்ராமாண்ய நிர்த்தாரணத்தை நாம் செய்யவேண்டு மன்றோ? காவ்ய நாடகாதிகளில் ப்ரவேசிக்கப்படும் பாத்ரங்கள், ஒவ்வொரு ஸமயத்தில் ஒவ்வொரு ஆவேசத்திற்குப் பரவசம் செய்யப்பட்டுப் பற்பல வாக்யங்களைப் பேசுவிப்பார்கள். அந்த வாக்யங்களெல்லாம் ப்ரமாணமாகும் பக்ஷத்தில், ஸ்த்ரீகளை இவர் தூஷிப்பது போலப் புமாங்களைத் தூஷிப்பதும் ஸுலபமாகும். இதை ஸ்ரீ. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியே அறியக்கூடும். ஸர்வ ப்ரகாரத்தாலும் ப்ரமாணமென்று எல்லாராலும் ஒத்துக் கொள்ளப்படும் சாஸ்த்ரங்கள், ஸ்த்ரீகளெல்லாரும் துஷ்டர்கள் என்று ஓரிடத்திலும் சொல்லவில்லை. ப்ரத்யுத, அநேக விடங்களில் மஹர்ஷிகள் அநேக ஸ்த்ரீகளின் ஸச்சரித்ரத்தையும் ஸாது ஸ்வபாவத்தையும் பலவாறாகப் புகழ்ந்து பேசியிருக்கிறார்கள். இவை யெல்லாவற்றிற்கும் விருத்தமாக நாம் இப்பொழுது அந்த ஜாதி முழுவதையும் திக்கரிக்க ஆரம்பித்தால், அது நம்மிடத்தில் இருக்கும் வைஷம்யத்தையும் ஆக்ரஹ விசேஷத்தையும் காண்பிக்குமே தவிர நமது நிஷ்பக்ஷபாதத் தன்மையைக் கொஞ்சமேனும் காண்பிக்கமாட்டாது.

எப்பொழுதும் ருஜுவான உக்திகளைப் பேசும் நமது ஆசார்யர்கள், சில உத்தம குணங்களை ஸ்த்ரீகளுடைய அஸாதாரண குணங்களென்று அநுக்ரஹித்திருக்கிறார்கள். பகவானுக்கும் லக்ஷ்மிக்கும் சேஷித்வாதிகளில் ஸாம்ய மிருக்கையிலும் குணங்களில் விசேஷ மிருக்கின்றது என்பதை நிரூபிக்குமிடத்தில்

"பும்ஸ்த்வாதௌ தண்ட தார்ட்ய வீர்ய பராக்ரம
ஸ்தைர்யாதீந் கூர்யா ஹமவதி ! மார்த்தவ வாத்ஸல்ய
ஸ்வயி த்வத்ஸேவகாநாம் உசிதவிதாயக கருணா
கடாக்ஷாந் தோத்தம் ஹவதி பதிவ்ரதாதி ஹி தா ॥"

[புமாங்களுக்கு இயற்கையாயுள்ள தண்ட தார்த்வம் பராக்ரமம் ஸ்தைர்யம் முதலான சில குணங்கள் பகவானுக்கு ப்ரதி நியதங்கள்; ஸ்த்ரீகளுக்கு அஸாதாரணங்க ளென்று சொல்லக்கூடிய மார்த்தவம் வாத்ஸல்யம் கருணை பதி பாரதந்த்ர்யம் முதலிய குணங்கள் லக்ஷ்மிக்கு ப்ரதிநியதங்கள்] என்று கருணை முதலிய உத்தம குணங்கள் ஸ்த்ரீகளுக்கு அஸாதாரணங்கள் என்று சொல்லப்பட்டிருக்கின்றன. ஆசார்யர்கள் இவ்விதம் சொல்லியிருக்கையில், இதற்கு ஸாக்ஷாத் விருத்தமாக ஸ்த்ரீக ளெல்லாரும் ஜந்மத்தாலேயே நிஷ்கருணர்க ளென்றும் துஷ்டர்க ளென்றும் அந்த ஆசார்ய வாக்யங்களில் விச்வஸிக்கும் நாம் எப்படிச் சொல்லத் துணிவோம்?

உண்மை வேறு. இக்காலத்தில் சில ஸ்த்ரீகள், தமக்கு இயற்கையாகவும் சாஸ்த்ர விதிப்படிக்கும் ஏற்பட்டுள்ள ஸாம்யைக் கடந்து அளவற்ற ஸ்வாதந்த்ர்யத்தில் அவாவுள்ளவர்களாய்ச் சில ஆக்ஷேபார்ஹங்களான ப்ரவ்ருத்தி விசேஷங்களைச் செய்ய யத்நிப்பதைப் பார்த்து ஸ்ரீ. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி மிக துக்கிதராய் ஸ்த்ரீ ஜாதியையே தூஷித்து விட்டார் என்றே நாம் நினைக்கிறோம். கைகேயினுடைய தௌர்ஜந்யத்தைப் பார்த்தவுடன் தசரத சக்ரவர்த்தி,

"திகஸ்து யோஷிதோ நாம சடா: ஸ்வார்த்தபராயணா:"

[ஸ்த்ரீகளெல்லாரும் நிந்த்யர்கள்] என்று ஸ்த்ரீ ஸாமாந்யத்தையே முதலில் திக்கரித்தானன்றோ? பிறகு அந்த ஆவேசம் தணிந்தவுடன் அவரே

"ந ப்ரவீமி ஸ்த்ரியஸ் ஸர்வா: பரதஸ்யைவ மாதரம்"

[ஸ்த்ரீகளெல்லாரையும் நான் நிந்திக்கவில்லை; பரதனுடைய மாதாவான கைகேயியை மாத்ரம் நிந்திக்கிறேன்] என்று உணர்ந்ததுபோல இவரும் உணர்வரென்றே நாம் நம்புகிறோம்.

* * *

ஸ்த்ரீகளின் ஸங்கம வயஸ் நிர்ணயம்.

நமது தேசத்தில் ஸ்த்ரீகளுக்கு அதி பால்யத்திலேயே விவாஹம் நடக்கிறபடியால், அவர்களுக்கு ஆரோக்யக் குறைவு முதலிய பல துன்பங்கள் ஸம்பவிக்கின்றன வென்று ப்ரமித்து, நமது தேசோத்தாரண கர்த்தாக்களுள் பலர் அம்மாதிரியான விவாஹத்தை ராஜாஜ்ஞையைக்கொண்டுத் தடுக்க முயல்கிறார்கள் என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இது மாத்ரமின்றிக்கே, அவர்கள், ஸங்கமார்ஹ வயஸ் வரும் முன்னதாகவே நமது தேசத்தில் ஸ்த்ரீகளுக்குக் கர்ப்பாதானம் செய்யப்படுகின்றது என்றும், அதுவும் தடுக்கப்பட வேண்டும் என்றும் உத்கோஷித்து வருகிறார்கள். இதைப்பற்றி ஏற்கெனவே ஒரு ராஜாஜ்ஞை பிறந்திருக்கின்றது. இப்பொழுது அந்த ஆஜ்ஞை அபர்யாப்தமாக இருக்கின்ற தென்பதும், அதில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் வயஸின் அவதி மிகவும் குறைவாக இருக்கின்ற தென்பதும் அதை இன்னும் அதிகப்படுத்தினாலொழிய தேசத்திற்கு நன்மை ஸம்பவிக்கமாட்டா தென்பதும் அவர்கள் செய்யும் வாதம்; ஏற்கெனவே விஹிதமாயுள்ள பதிமூன்று வயஸ் என்னும் நியமத்தைப் பதினாறாக மாற்ற வேண்டு மென்பது அவர்களுடைய ப்ரயத்நம். இந்த ப்ரயத்நத்தைப் பற்றி மஹாஜநங்களுடைய அபிப்ராயம் எப்படி இருக்கின்றது என்பதை நிர்ணயிப்பதற்காக இப்பொழுது ராஜாங்கத்தாரால் ஒரு சிறிய ஸங்கம் ஏற்படுத்தப்பட்டு, பல ஜநங்களிடமிருந்து அந்த ஸங்கத்தைக்கொண்டு அபிப்ராயம் க்ரஹிக்கப்பட்டு வருகின்றது. பத்து தினங்களாக அந்த ஸங்கம் மதராஸில் வந்திருந்து விசாரணையைச் செய்து விட்டு,

இப்பொழுது அது வேறு இடத்திற்குப் போயிருக்கின்றது. மதிராஸில் விசாரணை நடந்த காலத்தில் அநேக பெரியோர்களும் பிறரும் தம் தம் அபிப்ராயத்தை அந்த ஸங்கத்தினிடம் விஜ்ஞாபநம் செய்து கொண்டார்கள். அந்த விஜ்ஞப்திக ளெல்லாம் அப்பொழு தப்பொழுது பத்ரிகைகளின் மூலமாக ப்ரசுரம் செய்யப்பட்டன. பெரும்பான்மையோர் தேசோத்தாரகர்களுடைய ப்ரயத்நத்தை ஆதரித்தே பேசியிருக்கிறார்கள் என்பதும், சிலர் மாத்ரம் அம்மாதிரியான ஆலோசனை சாஸ்த்ர விருத்த மென்றும், அது தேசத்தின் நன்மைக்குக் காரணமாக மாட்டாதென்றும் ஆக்ஷேபித்திருக்கிறார்கள் என்பதும் அவைகளிலிருந்து விளங்கும். மற்ற விடங்களிலும் ஜநங்களுடைய விஜ்ஞப்தி இம்மாதிரி இருப்பதாகவே தெரியவருகின்றது. கடைசியில் ஏற்படும் நிர்ணயமானது மஹா ஜநங்களின் பெருங் கூட்டத்தாரின் அபிப்ராயத்தை அநுஸரித்து இருக்க வேண்டுமாதலால், அநேகமாக இந்த ஸங்கம் தேசோத்தாரகர்களுக்குச் சார்பாகவே தமது அபிப்ராயத்தை வெளியிடு மென்றும், ராஜாங்கத்தாரும் அதை அநுஸரித்து ஸங்கம வயஸ்ஸின் அவதியை உயர்த்தி விடுவார்களென்றும் நாம் நினைக்கிறோம்.

தேசோத்தாரகர்கள் இம்மாதிரி ஒரு பர்யாலோசனையை ராஜாங்கத்தாரிடம் சொல்லிக் கொள்வதும், அதைக் கேட்டு ராஜாங்கத்தார் அது விஷயமாக மஹா ஜநங்களின் அபிப்ராயத்தை விசாரிக்கும் பொருட்டு ஒரு ஸங்கத்தை ஏற்படுத்துவதும், அந்த ஸங்கம் அந்த ராஜநியமநத்தை ஆதாரமாகக் கொண்டு ஆங்காங்கு போய் அபிப்ராய விசாரணையைச் செய்வதும் இவையெல்லாம் பெரியதொரு கேலியாகவே நமக்குத் தோன்றுகிறது. ஒரு சட்டத்தை ஏற்படுத்துவதற்கு ப்ரயத்நப்படும் முன்பு, ‘விஷயம் சட்டத்திற்கு அர்ஹமா? இம்மாதிரி ஒரு சட்டம் ஏற்படுத்தினால் அதை ப்ரயோகம் செய்பக் கூடுமா?’ என்பது நன்றாக ஆலோசிக்கப்பட வேண்டுமன்றோ? விவாஹம் செய்துகொண்டு ஒரே க்ருஹத்தில் பதி பத்நிகளாக வஸித்து வரும் தம்பதிகளுடைய பரஸ்பர ஸங்கமும் இன்ன காலத்தில் இன்ன இடத்தில் இம்மாதிரியே நடைபெற வேண்டும் என்று ஒரு சட்டமும் கூடுமோ? அப்படி ஒரு சட்டம் ஏற்படுத்தப்பட்டால், அதற்கு விருத்தமாக ஸங்கமம் செய்பவர்களைக் கண்டு பிடிப்பதும், அதை ந்யாய ஸ்தலத்தில் ருஜுப்படுத்தி அவர்களைச் சிக்ஷைக்கு உட்படுத்துவதும் ஸாத்யமோ? இது என்ன மௌட்யம்! தத்வ ஸ்திதியை நன்றாக அறியாமலும், எவ்வித சாஸ்த்ர வரம்புமின்றிக்கே மனம் போன போக்கெல்லாம் மார்க்கோபதேசம் செய்பவர்களுமாக இருக்கும் மிதஜ்ஞர்களை மந்த்ராலோசனைக்கு அர்ஹர்களாகச் சேர்த்துக்கொண்டால், இம்மாதிரியான ஹாஸ்ய ஸ்திதியைத் தவிர்த்து வேறு ச்லாகார்ஹமான ஸ்திதி எவ்விதம் ஸம்பவிக்கும்? நமது ஆசாரங்களெல்லாவற்றிலும் த்ரிகால ஜ்ஞாநிகளான மஹர்ஷிகளால் காண்பிக்கப்பட்டுள்ள மார்க்கமே நமக்கு ப்ரமாணம். அதை விச்வஸித்து நடக்கும் வரையில் நமக்கு அச்ரேயஸ் இல்லை; அதற்கு விருத்தமாக நாம் எப்பொழுது செல்ல முயல்கிறோமோ அப்பொழுதே நமக்கு விநாசம்தான். இதை அறியாதவர்களுக்கு நாம் என் சொல்வோம்?

மநுஷ்யாதி ஶரீராணாம் சேதநப்ரகாரதயா லோகவேதயோ: ஸாமா
நாதிகரண்யேந ப்ரதிபாதநம் த்ருஷ்டம்। அயமர்த்த:— ஜாதிர்வா குணோ
வா த்ரவ்யம் வா ந தத்ராதர:; கிந்து த்ரவ்யவிஶேஷம் ப்ரதி விஶேஷண
தயைவ யஸ்ய ஸத்பாவ:, தஸ்ய ததப்ருதக்ஸித்தே: தத்ப்ரகாரதயா தத்ஸாமா
நாதிகரண்யேந ப்ரதிபாதநம் யுக்தம்; யஸ்ய புந: த்ரவ்யஸ்யைவ ஸத: ப்ருத
க்ஸித்தஸ்ய கதாசித்க்வசித் த்ரவ்யாந்தரப்ரகாரத்வமிஷ்யதே, தத்ர மத்வ
ர்தீயப்ரத்யய இதி விஶேஷ:। ஏவமேவ ஸ்தாவரஜங்கமாத்மகஸ்ய
ஸர்வஸ்ய வஸ்துந: பரமாத்மஶரீரத்வேந தத்ப்ரகாரதயைவ ஸ்வரூப

ஒரு புண்ய ஆதிக்யத்தால் தேவனானான்’ என்றும் ப்ரயோகங்கள் இல்லையா? ‘மநுஷ்யன்’ ‘மாடு’ ‘தேவன்’ என்னும் பதங்கள் அசேதந த்ரவ்யங்களாக இருக்கும் அந்தந்தச் சரீரங்களைக் குறிக்கின்றன; ‘தேவதத்தன்’ ‘யஜ்ஞதத்தன்’ ‘மற்றொருவன்’ என்னும் பதங்கள் சேதந த்ரவ்யங்களாக இருக்கும் ஜீவன்களைக் குறிக்கின்றன. இப்படி, கேவலம் பஞ்ச பூத ஸங்கீர்ணங்களாக இருக்கும் த்ரவ்யங்களுக்கு வேறு த்ரவ்யங்களாக இருக்கும் சேதநன்களுடன் ஸாமாநாதிகரண்யம் சொல்லுகிறோமன்றோ? உண்மை என்னவென்றால், ஸாமாநாதிகரண்யம் ப்ரதிபாதிக்கும் பொருட்டு ஒன்று த்ரவ்யமாகவும் மற்றொன்று அதன் ஜாதி குணங்களுள் ஒன்றாகவும் இருக்கவேண்டு மென்னும் நியமம் இல்லை; ஒரு த்ரவ்யத்தைக் குறித்து, மற்றொன்று ஜாதி குண த்ரவ்யங்களுள் எதுவாக இருந்தபோதிலும், அது தனித்து நிற்கக் கூடாததாயிருக்குமளவு விசேஷணமாக இருக்கும் பக்ஷத்தில், அதற்கு, அப்படித் தனித்து நிற்கக் கூடாமல் இருக்கும் தன்மையையே ஆதாரமாகக் கொண்டு அந்த த்ரவ்யத்துடன் ஸாமாநாதிகரண்யத்தை நாம் சொல்லக் கூடும். மற்றொன்றுக்கு விசேஷணமாக இல்லாமலே ஸ்வதந்த்ரமாக நிற்கக் கூடிய

போன்ற மற்றொரு த்ரவ்யத்திற்கு விசேஷணமாக வந்தால், அப்பொழுது இம்மாதிரி ப்ரத்யயம் வரவேண்டுமே தவிர, ஸாமாநாதிகரண்யம் சொல்லக்கூடாது என்பது ஆக்ஷேபம்.

லோகவேதயோ:— இவ்விடத்தில் ‘லோக:’ என்னும் பதத்திற்கு ‘ஸ்ம்ருதி’ என்று அர்த்தம் கொள்வது உசிதம். ஸாமாநாதிகரண்ய ப்ரதிபாதநத்திற்கு ப்ரமாணம் சொல்லும் இடத்தில் லௌகிக வாக்யத்தை ப்ரமாணமாகச் சொல்வதைக்காட்டிலும் ஸ்ம்ருதி வாக்யத்தை ப்ரமாணமாகச் சொல்வது உபபந்நமன்றோ? தவிரவும் அது வேதத்துடன் கூடப்படிக்கப் பட்டிருக்கின்றது.

“ அதோ(அ)ஸ்மி லோகே வேதே ச ப்ரதித: புருஷோத்தம: ”

என்னும் பகவத் கீதா வாக்யத்தின் பாஷ்யத்தில் ‘‘ வேதார்த்தாவலோகநாத் லோக இதி ஸ்ம்ருதிருச்யதே’’ [வேதார்த்தத்தை விளக்குகிறபடியால் ஸ்ம்ருதியை ‘லோகம்’ என்று சொல்லக்கூடும்] என்னும் வாக்யத்தைக் காணலாம். ‘லோக்யதே அநேந வேதார்த்த:’ என்பது அதற்கு வ்யுத்பத்தி.

ஸ்தாவ இதி தத்ப்ரகாரீ ஸம்ஸ்தாந ஏவ தத்தச்சப்தேநாபிதீயத இதி தத்ஸாமாநாதிகரண்யேந ப்ரவ்ருத்திரபாதகம் யுக்தம்। ததேதத் ஸர்வம் ஸர்வத்ரைவ நாமரூபவ்யாகரணச்ருதிவிவரணே ப்ரபஞ்சிதம்।

அத: ப்ரக்ருதிபுருஷமஹதஹங்காரதந்மாத்ரபூதேந்த்ரியததாரப்தசதுர்தசபுவநாத்மகப்ரஹ்மாண்டதததந்தர்வர்த்திதேவதிர்யங்மநுஷ்யஸ்தாவராதிஸர்வப்ரகாரஸம்ஸ்தாநஸம்ஸ்திதம் கார்யமபி ஸர்வம்

ஒரு த்ரவ்யம், எப்பொழுதாவது எவ்விடத்திலாவது மற்றொரு த்ரவ்யத்திற்கு ப்ரகாரமாக இருக்கும்படி சேர்ந்தால், அப்பொழுது அதற்கு ஸாமாநாதிகரண்யம் சொல்லக் கூடாது; அப்பொழுது தான் 'அந்த த்ரவ்யத்துடன் கூடிக்கொண்டிருக்கிறது அந்த மற்றொரு த்ரவ்யம்' என்று நாம் வ்யவஹரிக்க வேண்டும். இது தான் உண்மை. ப்ரக்ருதத்தில், ஸ்தாவரங்களாகவும் ஜங்கமங்களாகவும் வஸ்துக்களெல்லாம் எப்பொழுதும் ஈச்வரனுக்குச் சரீரமாகவே இருக்கின்றன; அவை ஒரு பொழுதும் ஸ்வதந்த்ரங்களாக நிற்கக்கூடியவை யல்ல; அவைகளுக்கு ஸ்வரூபம் நிலைப்பது முழுவதும் ஈச்வரனுக்கு அவை ப்ரகாரங்களாக இருப்பதனாலேயே. ஆகையால் அவைகளுக்கு அந்த ஈச்வரனுடன் ஸாமாநாதிகரண்யம் சொல்வது யுக்தமே. அதாவது, அவைகளைச் சொல்லும் சப்தங்களெல்லாவற்றாலும் ஈச்வரனே சொல்லப்படுகிறான் என்று சொன்னதாயிற்று. இந்த விஷயம் முழுவதும் முன்னமேயே நாம ரூப வ்யாகரண ச்ருதி வாக்யங்களை விவரிக்கும் ப்ரகரணத்தில் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

ஆகையால், சேதந தத்வ மாகிற ஜீவன், அசேதநங்களாகிற ப்ரக்ருதி மஹத் அஹங்காரம், தந்மாத்ரங்கள், பூதங்கள், இந்த்ரியங்கள், இவைகளுடைய பரஸ்பர சேர்க்கையால் உண்டாகும் பதினாலு லோகங்களடங்கிய ப்ரஹ்மாண்டம், அந்த ப்ரஹ்மாண்டத்தினுள் இருக்கும் (தனது) அப்ருதக் ஸித்த விசேஷணமான ஸுர நர திர்யக் ஸ்தாவராத்மக

நாமரூபவ்யாகரணச்ருதிவிவரணே—ஸத் வித்யா விவரணத்தை உபஸம்ஹரிக்கும் இடத்தில் இதைக் காண்க.

ப்ரக்ருதி—தத்வங்கள் இருபத்தைந்து. அவையாவன:— ஜீவன் ஒன்று, ப்ரக்ருதி மஹத் அஹங்காரம் இவை மூன்று, தந்மாத்ரங்கள் ஐந்து, பூதங்கள் ஐந்து, இந்த்ரியங்கள் பதினொன்று, இந்த இருபத்தைந்து தத்வங்களிலிருந்தே ப்ரபஞ்சத்தின் உத்பத்தி ஏற்படுகிறது என்பது நமது கொள்கை.

ப்ரஹ்மைவேதி காரணபூதப்ரஹ்மவிஜ்ஞாநாதேவ ஸர்வம் விஜ்ஞாதம் பவதீத்யேகவிஜ்ஞாநேந ஸர்வவிஜ்ஞாநமுபபந்நதரம்। ததேவம் கார்யகாரணபாவாதிமுகேந க்ருத்ஸ்நஸ்ய சிதசித்வஸ்துந: பரப்ரஹ்மப்ரகாரதயா ததாத்மகத்வமுக்தம்।

தத்ர ச பரமஸ்ய ப்ரஹ்மண: ஸ்வரூபேண பரிணாமாஸ்பதத்வ

ப்ரபஞ்சம், இவை யெல்லாவற்றுடனும் விசிஷ்டமாயிருக்கும் கார்ய வஸ்து முழுதிலும் ப்ரஹ்மமே; ஆகையால் காரண பூதமான ப்ரஹ்மத்தை அறிவதால் ஸகலமும் அறியப் பட்டதாகிவிடும்; ஆகையால் 'ஒன்றை அறிந்தால் எல்லாம் அறியப்பட்டதாகிவிடும்' என்னும் ப்ரதிஜ்ஞையும் நன்றாக உபபந்நமாகின்றது. இப்படி ப்ரஹ்மமே கார்ய வஸ்துவாகவும் காரண வஸ்துவாகவும் இருப்பதனால், பர ப்ரஹ்மத்திற்கு ப்ரகாரமாயுள்ள ஸகல சேதநாசேதந வஸ்துக்களும் பகவானை ஆத்மாவாக உடைத்தாயிருக்கின்றன வென்று சொல்லப்படுகின்றது.

தத்ர ச........ஸத்யஸங்கல்ப ஏவ—'பர ப்ரஹ்மம் விகாரமற்றதென்றும் தோஷமற்றதென்றும் ச்ருதிகள் சொல்லுகின்றன வென்னும் காரணத்தைக் கொண்டு நீங்கள் பர ப்ரஹ்மத்திற்கு ஸ்வரூப மாறுதல் இல்லை யென்று சொல்லுகிறீர்

கார்யகாரணபாவாதிமுகேந—'ப்ரபஞ்சம் ப்ரஹ்மமே' என்று நாம் சொல்லும் பொழுதெல்லாம் நாம் அவை இரண்டுக்கும் சரீர சரீரித் தன்மையால் ஏற்படும் ஒற்றுமையைச் சொல்லுகிறோமே தவிர, 'அவை இரண்டும் ஒன்றே' என்னும் ஸ்வரூபைக்யத்தைச் சொல்லவில்லை. அந்த ஒற்றுமையும் இரண்டு விதமாக ஏற்படலாம். ஒன்று கார்யம், மற்றொன்று காரணம் என்பதால் ஏற்படுவது ஒரு விதம்; ஒன்று ப்ரகாரம் மற்றொன்று ப்ரகாரி [அதாவது விசேஷணம் விசேஷ்யம்] என்பதால் ஏற்படுவது மற்றொரு விதம். இவைகளுள் கார்ய காரணத் தன்மையைச் சொன்னால், 'ப்ரகார ப்ரகாரித் தன்மை ஸித்தமாகி விடுகின்றது. ஆகையால் தான், இவ்விடத்தில் 'கார்யகாரணபாவாதிமுகேந சிதசித்வஸ்துந: பரப்ரஹ்மப்ரகாரதயா ததாத்மகத்வமுக்தம்' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

தத்ர ச—கீழில் ப்ரதிபாதிக்கப்பட்ட ஸாமாநாதிகரண்யம், ப்ரஹ்மம் ஜகத்திற்கு உபாதாந காரணமாகவும் இருக்கின்றது என்பதைச் சார்ந்து நிற்கிறது; அப்படி அது உபாதாந காரணமாக இருக்கின்றது என்பதை ஒத்துக்கொண்டால், அது 'ப்ரஹ்மம் எவ்வித விகாரமுமற்றது' என்று சொல்லும் ச்ருதி வாக்யத்திற்கு விரோதிக்குமாகையால் ப்ரஹ்மத்திற்கு உபாதாந காரணத்வம் எப்படிச் சொல்லக்கூடும்?

[illegible]

[illegible]

ஒரு த்ரவ்யம், எப்பொழுதாவது எவ்விடத்திலாவது மற்றொரு த்ரவ்யத்திற்கு ப்ரகாரமாக இருக்கும்படி சேர்ந்தால், அப்பொழுது அதற்கு ஸாமாநாதிகரண்யம் சொல்லக் கூடாது; அப்பொழுது தான் 'அந்த த்ரவ்யத்துடன் கூடிக்கொண்டிருக்கிறது அந்த மற்றொரு த்ரவ்யம்' என்று நாம் வ்யவஹரிக்க வேண்டும். இது தான் உண்மை. ப்ரக்ருதத்தில், ஸ்தாவரங்களாகவும் ஜங்கமங்களாகவும் வஸ்துக்களெல்லாம் எப்பொழுதும் ஈச்வரனுக்குச் சரீரமாகவே இருக்கின்றன; அவை ஒரு பொழுதும் ஸ்வதந்த்ரங்களாக நிற்கக்கூடியவை யல்ல; அவைகளுக்கு ஸ்வரூபம் நிலைப்பது முழுவதும் ஈச்வரனுக்கு அவை ப்ரகாரங்களாக இருப்பதனாலேயே. ஆகையால் அவைகளுக்கு அந்த ஈச்வரனுடன் ஸாமாநாதிகரண்யம் சொல்வது யுக்தமே. அதாவது, அவைகளைச் சொல்லும் சப்தங்க ளெல்லாவற்றாலும் ஈச்வரனே சொல்லப்படுகிறான் என்று சொன்னதாயிற்று. இந்த விஷயம் முழுவதும் முன்னமேயே நாம ரூப வ்யாகரண ச்ருதி வாக்யங்களை விவரிக்கும் ப்ரகரணத்தில் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

ஆகையால், சேதந தத்வ மாகிற ஜீவன், அசேதநங்களாகிற ப்ரக்ருதி மஹத் அஹங்காரம், தந்மாத்ரங்கள், பூதங்கள், இந்த்ரியங்கள், இவைகளுடைய பரஸ்பர சேர்க்கையால் உண்டாகும் பதினாலு லோகங்களடங்கிய ப்ரஹ்மாண்டம், அந்த ப்ரஹ்மாண்டத்தினுள் இருக்கும் (தனது) அப்ருதக் ஸித்த விசேஷணமான ஸுர நர திர்யக் ஸ்தாவராத்மக

[illegible] —ஸத் வித்யா விவரணத்தை உபஸம்ஹரிக்கும் இடத்தில் இதைக் காண்க.

[illegible] —தத்வங்கள் இருபத்தைந்து. அவையாவன:— ஜீவன் ஒன்று, ப்ரக்ருதி மஹத் அஹங்காரம் இவை மூன்று, தந்மாத்ரங்கள் ஐந்து, பூதங்கள் ஐந்து, இந்த்ரியங்கள் பதினொன்று, இந்த இருபத்தைந்து தத்வங்களிலிருந்தே ப்ரபஞ்சத்தின் உத்பத்தி ஏற்படுகிறது என்பது நமது கொள்கை.

[illegible]

[illegible]

ப்ரபஞ்சம், இவை யெல்லாவற்றுடனும் விசிஷ்டமாயிருக்கும் கார்ய வஸ்து முழுதிலும் ப்ரஹ்மமே; ஆகையால் காரண பூதமான ப்ரஹ்மத்தை அறிவதால் ஸகலமும் அறியப்பட்டதாகிவிடும்; ஆகையால் 'ஒன்றை அறிந்தால் எல்லாம் அறியப்பட்டதாகிவிடும்' என்னும் ப்ரதிஜ்ஞையும் நன்றாக உபபந்நமாகின்றது. இப்படி ப்ரஹ்மமே கார்ய வஸ்துவாகவும் காரண வஸ்துவாகவும் இருப்பதனால், பர ப்ரஹ்மத்திற்கு ப்ரகாரமாயுள்ள ஸகல சேதநாசேதந வஸ்துக்களும் பகவானை ஆத்மாவாக உடைத்தாயிருக்கின்றன வென்று சொல்லப்படுகின்றது.

[illegible] —'பர ப்ரஹ்மம் விகாரமற்றதென்றும் தோஷமற்றதென்றும் ச்ருதிகள் சொல்லுகின்றன வென்னும் காரணத்தைக் கொண்டு நீங்கள் பர ப்ரஹ்மத்திற்கு ஸ்வரூப மாறுதல் இல்லை யென்று சொல்லுகிறீர்

[illegible] —'ப்ரபஞ்சம் ப்ரஹ்மமே' என்று நாம் சொல்லும் பொழுதெல்லாம் நாம் அவை இரண்டுக்கும் சரீர சரீரித் தன்மையால் ஏற்படும் ஒற்றுமையைச் சொல்லுகிறோமே தவிர, 'அவை இரண்டும் ஒன்றே' என்னும் ஸ்வரூபைக்யத்தைச் சொல்லவில்லை. அந்த ஒற்றுமையும் இரண்டு விதமாக ஏற்படலாம். ஒன்று கார்யம், மற்றொன்று காரணம் என்பதால் ஏற்படுவது ஒரு விதம்; ஒன்று ப்ரகாரம் மற்றொன்று ப்ரகாரி [அதாவது விசேஷணம் விசேஷ்யம்] என்பதால் ஏற்படுவது மற்றொரு விதம். இவைகளுள் கார்ய காரணத் தன்மையைச் சொன்னால், 'ப்ரகார ப்ரகாரித் தன்மை ஸித்தமாகி விடுகின்றது. ஆகையால் தான், இவ்விடத்தில் [illegible]' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

[illegible] —கீழ்ல் ப்ரதிபாதிக்கப்பட்ட ஸாமாநாதிகரண்யம், ப்ரஹ்மம் ஜகத்திற்கு உபாதாந காரணமாகவும் இருக்கின்றது என்பதைச் சார்ந்து நிற்கிறது; அப்படி அது உபாதாந காரணமாக இருக்கின்றது என்பதை ஒத்துக்கொண்டால், அது 'ப்ரஹ்மம் எவ்வித விகாரமுமற்றது' என்று சொல்லும் ச்ருதி வாக்யத்திற்கு விரோதிக்கு மாகையால் ப்ரஹ்மத்திற்கு உபாதாந காரணத்வம் எப்படிச் சொல்லக்கூடும்?

நிர்விகாரத்வம் நிரவத்யத்வம் ச ஶ்ருதிஶதாவகதம் ப்ரஸங்கேந நிவாரிதம்। "ப்ரக்ருதிஶ்ச ப்ரதிஜ்ஞாத்ருஷ்டாந்தாநுபரோதாத்" [ப்ர. ஸூ. I–4–23] இத்யேகவிஜ்ஞாநேந ஸர்வவிஜ்ஞாநப்ரதிஜ்ஞாம்ருத்தத்கார்யத்ருஷ்டாந்தாப்யாம் பரஸ்யைவ ப்ரஹ்மணோ ஜகதுபாதாநகாரணத்வம் ச ப்ரதிபாதிதம்। உபாதாநகாரணத்வஞ்ச பரிணாமாஸ்பதத்வமேவ। கதமிதமுபபத்யதே?

கள். 'ப்ரக்ருதிஶ்ச' என்று ஆரம்பிக்கும் ஸூத்ரத்தை வ்யாக்யாநம் செய்யுமிடத்தில் அந்த ஸூத்ரம், ஒன்றை அறிந்த மாத்ரத்தால் எல்லாம் அறியப்பட்டதாகி விடுமென்னும் ப்ரதிஜ்ஞா பலத்தாலும் மண் அதன் கார்யமாகிற குடம் இவை முதலியவைகளின் த்ருஷ்டாந்த பலத்தாலும் பர ப்ரஹ்மம் ஜகத்திற்கு உபாதாந காரணமென்பதை ப்ரதிபாதிக்கின்றதென்றும் சொல்லுகிறீர்கள். எது எது உபாதாந காரணமோ அதெல்லாம் மாறுதலுக்குப் பாத்ரமாக வேண்டுமே. ஆகையால் நீங்கள் சொல்வது எவ்விதம் உபபந்நமாகும்?' என்னில், அதற்கு ஸமாதாநம் சொல்லுகிறோம். ஜீவனுடன்கூடிய ப்ரபஞ்சம் முழு

என்பதுதான் இவ்விடத்திற் செய்யப்படும் ஆக்ஷேபம். [உபாதாந காரணம் என்பதன் பொருளை 43-ம் பக்கத்தில் காண்க]

"ப்ரக்ருதிஶ்ச ப்ரதிஜ்ஞா த்ருஷ்டாந்தாநுபரோதாத்"—இது ப்ரஹ்ம ஸூத்ரம். இதன் பொருளாவது:—ப்ரக்ருதிஶ்ச—ஜகத்திற்கு உபாதாந காரணமும் ப்ரஹ்மமே. ['ப்ரக்ருதி' என்னும் சப்தத்திற்கு இவ்விடத்தில் 'உபாதாந காரணம்' என்பது பொருள்.] ப்ரதிஜ்ஞாத்ருஷ்டாந்தாநுபரோதாத்—அப்படி ஒத்துக் கொண்டால் மாத்ரம் ப்ரதிஜ்ஞையும் த்ருஷ்டாந்தமும் உபரோதிக்கப்பட மாட்டா. சாந்தோக்யத்தில் ஸத் வித்யையில், முதலில் 'எதை அறிந்தால் எல்லாம் அறியப்பட்டதாகிவிடுமோ' என்று ப்ரதிஜ்ஞை செய்யப்பட்டிருக்கின்றது. நடுவில், 'எப்படி மண் பிண்டத்தை அறிந்த மாத்ரத்தால் அந்த மண்ணால் செய்யப்பட்டுள்ள ஸகல பதார்த்தங்களும் அறியப்பட்டனவாகி விடுமோ' என்று த்ருஷ்டாந்தம் கூறப்பட்டிருக்கின்றது. ப்ரஹ்மத்திற்கு உபாதாந காரணத்வம் ஒத்துக்கொண்டால் மாத்ரம் இவை இரண்டும் உபபந்நங்களாகும். [கீழ்ச் ஸத் வித்யா ப்ரகரணத்தைப் பார்க்க].

ஸர்வவிஜ்ஞாநப்ரதிஜ்ஞாம்ருத்தத்கார்யத்ருஷ்டாந்தாப்யாம்—ஸர்வ விஜ்ஞாந ப்ரதிஜ்ஞையாலும், மண் அதன் கார்யமாகிற குடம் முதலானவை இவைகளின் த்ருஷ்டாந்தத்தாலும். ப்ரதிஜ்ஞா ச த்ருஷ்டாந்தஶ்ச ப்ரதிஜ்ஞாத்ருஷ்டாந்தௌ, தாப்யாம் என்று பிரித்துக்கொள்ளவேண்டும்.

கதஞ்சோச்யதே। ஸஜீவஸ்ய ப்ரபஞ்சஸ்யாவிஶேஷேண காரணத்வ ஶ்ருதம்। தத்ர ஸம்ஸாரஸ்ய ஜீவஸ்யைவ பரிணாமாஸ்பதத்வமதேந

"நாத்மா ஶ்ருதேர் நித்யத்வாச்ச தாப்ய:" [ப்ர. ஸூ. II–3–18.]

இதி விரோத்யதே। வைஷம்யநைர்க்ருண்யபரிஹாரஶ்ச

"வைஷம்யநைர்க்ருண்யே ந ஸாபேக்ஷத்வாத்" [ப்ர. ஸூ. II–1–34.]

வதற்கும் பர ப்ரஹ்மம் காரணமென்றன்றோ ச்ருதி சொல்லுகின்றது? அதில் ஜீவனுக்கு அது எப்படி காரணமாகின்றது என்பதை உபபாதிக்குமிடத்தில், நீங்கள், 'பர ப்ரஹ்மமே ஜீவனாகப் பரிணமிக்கின்றது; ஆகையால் அது அதற்குக் காரணமாகின்றது' என்று சொல்லுகிறீர்கள். அப்படிச் சொல்வது 'நாத்மா' என்று ஆரம்பிக்கும் ஸூத்ரத்திற்கு விருத்தமன்றோ? 'வைஷம்ய நைர்க்ருண்யே' என்று ஆரம்பிக்கும் ஸூத்ரத்

கதஞ்சோச்யதே—உபாதாந காரணத்வமானது சேதநாசேதநங்களை விசேஷணமாகக் கொண்டிருக்கும் ஈச்வரனைப்பற்றியதென்றும், விகாரமற்றிருப்பதானது விசேஷ்யாம்சமான பரமாத்மாவை மாத்ரம் பற்றியதென்றும், ஆகையால் சங்கிக்கப்படும் விரோதம் இல்லையென்றும் ஸமாதாநம் சொல்லப்படுகின்றது. இந்த ஸமாதாநத்தைப் பிந்திச் சொல்லப்போகிறவராய், முதலில், 'ஸம்ஸாரஸ்ய ஜீவஸ்ய........உதாஹ்ருதா' என்னும் க்ரந்தத்தால் 'ஈச்வரனே ஜீவரூபமாகவும் அசேதந ரூபமாகவும் பரிணமிக்கிறான்; ஆகையால் அவன் உபாதாந காரணமாகிறான்' என்று சொல்வதில் ஸம்பவிக்கும் தூஷணங்களைச் சொல்லிவிட்டு, பிறகு 'ஸம்ச........ஸாத்ய ஸங்க்ஷேப ஸஸ' என்பதால் தமது ஸமாதாநத்தைச் சொல்லுகிறார்.

'நாத்மா ஶ்ருதேர் நித்யத்வாச்ச தாப்ய:'—இதுவும் ப்ரஹ்ம ஸூத்ரம். இதன் பொருள்:—ஆத்மா ந—ஆத்மாவானது உத்பத்தி செய்யப் படுகிறதில்லை; ஶ்ருதே:—ச்ருதியில் அதன் உத்பத்தி நிஷேதிக்கப்பட் டிருக்கிறபடியால்; தாப்யோ நித்யத்வாச்ச—அந்த ச்ருதிகளிலிருந்தே அதன் நித்யத்வம் அறியப்படுகிறபடியாலும்.

வைஷம்யநைர்க்ருண்ய பரிஹாரஶ்ச—ஒருவன் ஸுகியாகவும் மற்றொருவன் துக்கியாகவும் ஸ்ருஷ்டிக்கப்பட்டிருப்பதைப் பார்த்து, இப்படி ஸ்ருஷ்டிக்கும் ஈச்வரன் பக்ஷபாதமுள்ளவனாகவும் தயையற்றவனாகவும் இருக்கவேண்டும் என்று சங்கிப்பவர்களுக்கு ஸமாதாநம் சொல்லுமிடத்தில், 'ஜீவன்கள் அநாதி; அவைகளுக்குத் தேஹம் முதலியவற்றைக் கொடுத்து அவைகளை ஸ்ருஷ்டிக்கும்பொழுது, ஈச்வரன் அவ்வவைகளின் பூர்வ கர்மங்களுக்குத் தகுந்தபடியே ஸ்ருஷ்டிக்கிறான்' என்று ஜீவனை அநாதி

இதி ஜீவாநாமநாதித்வாத் ப்ரவாஹரூபேண தத்கர்மநிமித்ததயா ஸ்ருஷ்டிவாதித: ।

“ந கர்மாவிபாகாத், இதி சேத்; ந, அநாதித்வாத், உபபத்யதே சாப்யுபலப்யதே ச” [ப்ர. ஸூ. II-1-35]

இதி அக்ருதாப்யாகமக்ருதவிப்ரணாசப்ரஸங்கம் அநித்யத்வசோத்யம் பரிஹ்ருத: ।

திலும், ஜீவன் அநாதி என்பதை ஒத்துக்கொண்டே, பூர்வ கர்மத்திற்குத் தக்கபடி ஈச்வரன் ஸ்ருஷ்டி செய்கிறபடியால் அவனிடம் பக்ஷபாதத்தையாவது தயவற்ற தன்மையையாவது சொல்வது உபபந்நமாக மாட்டாது என்று நிர்த்தாரணம் செய்யப்பட்டிருக்கின்றது. “ந கர்ம” என்று ஆரம்பிக்கும் ஸூத்ரத்திலும், ஜீவன் நித்யனன்று என்று சொல்லும் பக்ஷத்தில், அவன், தான் செய்யும் கார்யங்களின் பலத்தை அநுபவிக்காமல் போகும்படிக்கும் தன்னால் செய்யப்

யென்று ஒத்துக்கொண்டே ஸமாதாநம் சொல்லப்பட்டிருக்கிறது என்பது இவ்விடத்தில் விஷயம். “வைஷம்யநைர்க்ருண்யே ந, ஸாபேக்ஷத்வாத்” என்பதும் ப்ரஹ்ம ஸூத்ரம். இதன் பொருள்:—வைஷம்யநைர்க்ருண்யே ந—பக்ஷபாதமும் தயையற்ற தன்மையும் ப்ரஸங்கிக்கமாட்டா; ஸாபேக்ஷத்வாத்—பலவிதமாக இருக்கும் இந்த ஸ்ருஷ்டியானது அந்தந்த ஜீவன்களுடைய கர்மத்தைப் பொருத்திருக்கிறபடியால்.

“ந கர்மாவிபாகாதிதி சேந்ந, அநாதித்வாத் உபபத்யதே சாப்யுபலப்யதே ச”—இதுவும் ப்ரஹ்ம ஸூத்ரம். ‘ஸ்ருஷ்டிக்கு முன் ஜீவன்கள் இருந்தாலன்றோ, அவைகளுக்குப் பூர்வ கர்மம் ஏற்படும்?’ என்னும் சங்கையைச் செய்துகொண்டு அதற்கு ஸமாதாநம் சொல்லுமிடத்தில், ‘ஜீவன்கள் அநாதி, அவைகளின் கர்ம ப்ரவாஹமும் அநாதி’ என்பதை ஒத்துக்கொண்டே ஸமாதாநம் சொல்லப்பட்டிருக்கிறது. ஸூத்ரத்தின் பொருள்:—அவிபாகாத்—(‘முதலில் ஈச்வரன் ஒருவனே இருந்தான்’ என்று ச்ருதி வாக்யங்கள் ஒருமையையே வற்புறுத்துவதால் தெரியவரும்) அவிபாகத்திலிருந்து (விபாகத்தின் இன்மையிலிருந்து), கர்ம ந—பூர்வ கர்மம் என்பதே இல்லை என்று ஏற்படுகிறது; இதி சேத்—என்று ஆக்ஷேபிக்கும் பக்ஷத்தில், ந—(அந்த ஆக்ஷேபம்) நிற்கமாட்டாது; அநாதித்வாத்—(ஜீவன்களும் அவைகளின் கர்ம ப்ரவாஹமும்) அநாதியானவையாதலால்; உபபத்யதே ச—(அப்படி அவை அநாதியாக இருக்கையிலும் கீழ்க் கூறப்பட்டுள்ள ஒருமை) உபபந்நமாகும்; உபலப்யதே ச—(அவைகளின் அநாதித்வமும் ச்ருதிகளில்) சொல்லப்பட்டுமிருக்கின்றது.

அக்ருதாப்யாகமக்ருதவிப்ரணாசப்ரஸங்கம்—‘அக்ருதாப்யாகம’ என்பதற்கு, ‘செய்யப்படாததன் வரவு’ என்பது பொருள். அதாவது ‘ஹேதுவில்லாமலே பலத்தின் ப்ராப்தி’ என்று சொன்னதாயிற்று. ‘க்ருதவிப்ரணாச’ என்பதற்கு, ‘செய்யப்பட்டதன் நாசம்’ என்பது பொருள். அதாவது ‘செய்யப்பட்ட கர்மங்கள் பலமற்றுப் போவது’ என்று சொன்னதாயிற்று. ஜந்மாந்தர கர்மத்தை ஒத்துக்கொள்ளாமற் போனால், இந்த இரண்டு தோஷங்களும் ப்ரஸங்கிக்கும் என்பது ஸ்பஷ்டம்.

ஈச்வரனிடத்தில் வைஷம்ய நைர்க்ருண்யங்கள் இல்லையென்றும், ‘நமக்குக் கிடைக்கும் பலன்கள் எல்லாவற்றிற்கும் ஹேதுக்கள் உண்டு, நம்மால் செய்யப்படும் கர்மமொன்றும் நிஷ்பலமாக மாட்டாது’ என்றும் சொல்வதற்கு, ‘ஜீவன்கள் அநாதி, அவைகளின் கர்ம ப்ரவாஹமும் அநாதியே’ என்று ஒத்துக்கொள்ள வேண்டியது அவச்யம். அப்படி ஜீவன்களை அநாதியென்று ஒத்துக் கொண்டால், ஈச்வரனே ஜீவனாகப் பரிணமிக்கிறான் என்று சொல்வது ஸாத்யமில்லை. இது தான் விஷயம்.

ததா ப்ரக்ருதேரபி அநாதிதா ச்ருதிபி: ப்ரதிபாதிதா ।

186790.

“அஜாமேகாம் லோஹிதசுக்லக்ருஷ்ணாம்
பஹ்வீ: ப்ரஜா: ஸ்ருஜமாநாம் ஸரூபா: ।

படாத கார்யங்களின் பலத்தை அநுபவிக்கும்படிக்கும் ப்ரஸங்கிக்குமாகையால், அவன் நித்யனென்றே ஒத்துக்கொள்ள வேண்டுமென்று ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கின்றது. இவையெல்லாம், ப்ரஹ்மமே ஜீவனாகப் பரிணமிக்கின்றது என்று நீங்கள் சொல்வதற்கு எவ்விதம் ஒத்து வரும்? தவிரவும், நீங்கள், பரப்ரஹ்மமே ப்ரக்ருதியாகப் பரிணமிக்கின்றது என்றும், ஆகையால் அது அதற்குக் காரணமாகின்றது என்றும் சொல்லுகிறீர்கள். அதுவும் ச்ருதி ஸ்ம்ருதிகளுக்கு விருத்தமே. ச்ருதி ஸ்ம்ருதிகளெல்லாம், ப்ரக்ருதி அநாதி என்று சொல்லுகின்றன. ‘அஜா மேகாம்’ இத்யாதியான ச்ருதி,

---

ததா ப்ரக்ருதேரபி—ஈச்வரன் அசேதநமாகப் பரிணமிக்கிறான் என்று சொல்வதில் ஸம்பவிக்கும் தோஷத்தைச் சொல்லுகிறார்.

‘அஜாமேகாம்........இந்த ச்ருதி வாக்யமானது சிதசித் விவேகத்தைச் சொல்லுகின்றது. அசேதந வஸ்துவும், சேதந வஸ்து போல, அநாதியே என்பது ப்ரக்ருத விஷயம். வாக்யத்தின் பொருள்:—லோஹித சுக்ல க்ருஷ்ணாம்—சிவப்பாயும் வெளுப்பாயும் கறுப்பாயுமிருக்கும் [தேஜஸ் ஜலம் ப்ருதிவீ இவைகளின் ரூபத்தை உடைத்தாயிருக்கும்,] ஸரூபா: பஹ்வீ: ப்ரஜா: ஸ்ருஜமாநாம்—தனக்கு ஸமாநமான ரூபத்தை உடைய அநேக வித பௌதிக வஸ்துக்களை உண்டுபண்ணிக் கொண்டுமிருக்கும், அஜாமேகாம்—உற்பத்தியற்ற ஒன்றை, ஏகா: அஜா:—உற்பத்தியற்

அஜோ ஹ்யேகோ ஜுஷமாணோऽநுசேதே
ஜஹாத்யேநாம் புக்தபோகாமஜோऽந்ய: ॥" [ச்வே]

இதி ப்ரக்ருதிஜீவயோரஜத்வம் ப்ரதிபாத்ய ।

"அஸ்மாந்மாயீ ஸ்ருஜதே விச்வமேதத்
தஸ்மிம்ச்சாந்யோ மாயயா ஸந்நிருத்த: ।
மாயாம் து ப்ரக்ருதிம் வித்யாந்மாயிநம் து மஹேச்வரம்" [ச்வே.]

இதி ப்ரக்ருதேரேவ ஸ்வரூபேண விகாராஸ்பதத்வம் ச ப்ரதிபாதயதி ।

"கௌரநாத்யந்தவதீ ஸா ஜநித்ரீ பூதபாவிநீ" [மந்த்ரிக.]

இதி ச ஸ்ம்ருதிச்ச பவதி;

ப்ரக்ருதி ஜீவன் இவை இரண்டும் உத்பத்தியற்றவை என்பதைச் சொல்லுகின்றது. 'அஸ்மாத்' இத்யாதியான ச்ருதியும் 'மாயாம்' இத்யாதியான ச்ருதியும் ப்ரக்ருதி மாத்ரமே ஸ்வரூப மாற்றம் அடையக்கூடியது என்பதை விளக்குகின்றது. 'கௌ:' இத்யாதி

திருக்கும் ஒரு அறியாதவன், ஜுஷமாண:—அதுவே நான் என்னும் புத்தியுடன் அநுபவித்துக்கொண்டு, அநுசேதே—அதை அநுஸரித்து நிற்கிறான். அந்ய: அஜ:—உற்பத்தியற்றிருக்கும் மற்றொரு அறிந்தவன், புக்தபோகாம் ஏநாம் ஜஹாதி—ஸ்வல்ப காலம் அநுபவித்து விட்டு, பிறகு வைராக்யம் கொண்டவனாய் அதை த்யஜிக்கிறான்.

'அஸ்மாந்மாயீ ....'—ப்ரக்ருதிதான் மாறுதலுக்கு உட்பட்டது என்பதைக் காண்பிக்கின்றது இந்த வாக்யம். மாயீ—ப்ரக்ருதியை ப்ரேரிப்பிக்கும் பரமாத்மா, அஸ்மாத் ஏதத் விச்வம் ஸ்ருஜதே—அந்த ப்ரக்ருதியை ஸாதநமாகக் கொண்டு ப்ரபஞ்சத்தை ஸ்ருஷ்டிக்கிறான். அந்ய:—அந்த ஈச்வரனைக் காட்டிலும் வேறான ஜீவன், தஸ்மிந் மாயயா ஸந்நிருத்த:—அந்த ப்ரக்ருதியினாலேயே கட்டப்பட்டு நிற்கிறான் [அதனால் மோஹமடைந்தவனாயிருக்கிறான்.]

"மாயாம்........."—கீழ்ச் சொல்லப்பட்டுள்ள வாக்யத்தில் இருக்கும் 'மாயா' என்னும் சப்தத்தால் எது சொல்லப்படுகிறது? அதை ப்ரேரிப்பவன் யாவன்? என்பதை விளக்குகிறது இந்த வாக்யம். ப்ரக்ருதிம்—ஸத்வ ரஜஸ் தமோ குணங்களை உடைய ப்ரக்ருதி தத்வத்தை, மாயாம் வித்யாத்—விசித்ரமான ஸ்ருஷ்டிக்கு ஹேதுவாகிறபடியால் 'மாயை' என்று அறி; மாயிநம்—அந்த ப்ரக்ருதியை ப்ரேரிக்குமவனை, மஹேச்வரம் வித்யாத்—பரமாத்மாவென்று அறி.

'கௌ:.........'—அநாத்யந்தவதீ—ஆதியும் அந்தமும் அற்றிருக்கும் (நித்யமாக இருக்கும்), கௌ:—ப்ரக்ருதியானது, 'ஜநித்ரீ'—முதலில் தேஜஸ் ஜலம் ப்ரு

ஸ்ரீ வேதாந்த தேசிகன் ஸ்தோத்ரங்களுக்கு வ்யாக்யாநம்.

திருச்சி அட்வோகேட்

ஸ்ரீ உப. எ. வி. கோபாலாசார்ய ஸ்வாமி. எம்.ஏ.பி.எல்

ஸம்ஸ்கிருதத்தில் இயற்றியது.

விலை.

1.	பகவத்யாந ஸோபானம் (தேவநாகரி)	0	6	0
2.	தசாவதார ஸ்தோத்ரம் (தேவநாகரி)	0	8	0
3.	கோபால விம்சதி (தேவநாகரி)	0	8	0
4.	தேவநாயக பஞ்சாசத் (கிரந்தம்)	0	8	0

தபால் சார்ஜ் அணா 1. ப்ரத்யேகம்.

புஸ்தகங்கள் கிடைக்குமிடம்:—

(1) கார்யதர்சி, ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை, திருவல்லிக்கேணி, சென்னை.

(2) வாணி விலாஸ பிரஸ், ஸ்ரீரங்கம்.

(3) ஸ்ரீ கோமளாம்பா பிரஸ், கும்பகோணம்.

கேஸரியின்
உயர்தரமான
ஒளஷதங்கள்.

கேஸரியின் லோத்ரா, அமிருதம், அர்க்கா, ஆகிய மூன்றும் கேசரியின் அத்புத ஒளஷதங்களென்பது உலகப்பிரஸித்தம்.

பாலர்களுக்கும் முதியோருக்கும் மிக உபயோகமானவை.

கேஸரி குடீரம்

இந்திய மருந்து வியாபாரிகள்,
எழும்பூர், சென்னை.

கிளை ஆபீஸ்:—பெங்களூர்

எல்லா விடங்களிலும் ஏஜண்டுகளிருக்கின்றனர்.

மெடல்கள் பெற்றதும், ரிஜிஸ்டர் நெ. 329, உன்னதமான,

எப்பொழுதும்

C. B. S. ராவின் சர்பத்துகளையே

உபயோகியுங்கள்.

குளிர்ச்சியையும், மகிழ்ச்சியையும் உண்டாக்கக்கூடியது. உண்மையானது. உத்திரவாதமுள்ளது.

நன்னாரிவேர் புட்டி ரூ. 1—8	லெமன் „ „ 1—8	பாதாமி ரூபா
அனாசி „ „ 1—8	ரோஜா „ „ 1—12	1—12.

குழந்தைகளுக்கான கைகண்ட மருந்துகள்.

கோரோஜனை மாத்திரை (100 கொண்ட) புட்டி 1-க்கு 1½ அணா.
கஸ்தூரி மாத்திரை „ „ 8 அணா.

வியாபாரிகளுக்கும் தக்க கமிஷன் உண்டு.

தயாரிப்பவர்:—

C. B. ஸ்ரீனிவாச ராவ், ஆயுர்வேத வைத்யர்,
92, வெங்கடாசல முதலி தெரு, மீர்சாகிப்பேட்டை,
ராயப்பேட்டை, P. O. மதராஸ்.

ஸ்ரீ பக்திஸாரோ விஜயதே.

"விஜ்ஞான பாஸ்கரம்"

இது ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

உ. வே. வித்வான் ஸ்ரீநிவாஸாசார்யார் ஸ்வாமிகளால் வெளியிடப்படும்.

இதிலடங்கிய விஷயங்கள்:—விசிஷ்டாத்வைத ஸம்ப்ரதாயங்கள், தத்வம், தருமம், ஒழுக்கம், நவீன நாகரீக சீர்திருத்தங்கள், முன்னோர்களுடைய க்ரந்த விமர்சம், ஸ்ரீ வைஷ்ணவ சமயக் கொள்கைகள், பண்டிதர்களின் உபந்யாஸம், பழைய நடை விளக்கம், ஸ்ரீ ராமாயண தனி ச்லோகி முதலியன. யாவரும் எளிதிலறியும்படியாக எழுதப்படுகிறது. ஸ்ரீமான் உ. வே. வித்வான் திருமழிசை கோயில் கந்தாடை உபந்யாஸ ரத்னம் ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமிகளால் வெளியிடப்படுவது. பிரதி மாதமும் ஒவ்வொரு முதல் தேதிகளில் தவறாமல் வெளிவரும். 32—பக்கங்கள் கொண்டது.

வருஷ சந்தா ரூபா 1. (ரூபாய் ஒன்று)

ஸ்ரீராமன் மனுஷ்யனா? அல்லது பரப்ரஹ்மமா?	அணா	3
ஸ்ரீமத் பகவத்கீதா பாஷ்யம் (முதல் அத்தியாயம்)	,,	5
த்ரிமத ஸித்தாந்தஸாரஸங்க்ரஹம்	,,	2

"விஜ்ஞான பாஸ்கரம்" ஆபீஸ்,

32, வீணதீர்த்த விநாயகர் கோவில் வீதி,

பெரம்பூர் பாரக்ஸ். குயப்பேட்டை,

மதராஸ்.

மாதிரி காப்பிகளுக்கு 2 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

உங்கள் ஆரோக்யத்திற்குற்ற தோழன்

அமிருதாஞ்சனம்.

கீழ்க்கண்ட வியாதிகளுக்கு ஆச்சர்ய நிவாரணி.

தலைவலி	இருமல்
நரம்புவலி	ஜளிப்பு
முதுகுவலி	நெருப்புக்காயம்
இடுப்புவலி	காயங்கள்
கீல்வாயுவு	சுளுக்குகள்

மற்றுமுள்ள வலிகளுக்கும் நோவுகளுக்கும்.

அமிருதாஞ்சனம் டிபோ,

பம்பாய் மதராஸ்.

இது, சென்னை சுதேசமித்திரன் பிராஞ்சு அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு,
சென்னை ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை கார்யதர்சியால் வெளியிடப்படுவது.